
# திருமூலர்





## திருமூலர் மிஷன் &
## திருமூலர் அருளாட்சி மன்றம்


வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
நிறுவனர் – தலைவர்

# திருமூலர்

*தொகுப்பாசிரியர்:*

வித்துவான் ஸ்ரீமத்

முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்




*பதிப்பாசிரியர்:*

"ஆன்மிகரத்னா", சுடர்மணிக்கவிஞர்

வேம்பத்தூர் கிருஷ்ணன்



THIRUMOOLAR MISSION

*வெளியிடுவோர்:*

திருமூலர் மிஷன் – திருமூலர் அருளாட்சி மன்றம்

ஆழ்வார்பேட்டை

சென்னை – 600 018.

# திருமூலர்

*தொகுப்பாசிரியர்:*
வித்துவான் ஸ்ரீமத்
**முத்துக்குமார சுவாமித்**
**தம்பிரான் சுவாமிகள்**

✣ ✣ ✣

*பதிப்பாசிரியர்:*
"ஆன்மிகரத்னா", சுடர்மணிக்கவிஞர்
**வேம்பத்தூர் கிருஷ்ணன்**

✣ ✣ ✣

*லேசர் டைப்செட்டிங் :*
**ஸ்ரீ சத்தியநாராயணா**
சென்னை – 600 030.


✣ ✣ ✣

*அச்சிட்டோர் :*
*நியு சிவசக்தி கிராபிக்ஸ்*
சென்னை - 600 014.
✣ ✣ ✣ பேஜா : 9610 - 117669

*அட்டை ஓவியம்:*
**T. சின்னராஜ்**
*உள் படங்கள்:*
**அமுதோன்**
**S. கணேசன்**
**T. சின்னராஜ்**

✣ ✣ ✣


வெளியீடு:
13.11.1997
காமராஜர் அரங்கம், சென்னை 18.


அன்பே
சிவம்
- திருமூலர்



# திருமூலர்
# THIRUMOOLAR

## பொருளடக்கம்
(CONTENTS)


ஒன்றே
குலம்
ஒருவனே
தேவன்.
யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்.!
—திருமூலர்—

Sivamayam

"One Race One God" "Let the World enjoy my Bliss"

# Thirumoolar Mission - Thirumoolar Arulatchi Mandram

(Regd. 471 / 97)
NO. 9, MAHARAJA SURYA SALAI, ALWARPET,
CHENNAI - 600 - 018. PH : 4337947

**INAUGURATION**

*Venue* : Kamarajar Hall, Teynampet, Chennai - 600 018.
*Date* : 13.11.97.

Dear Devotees.

Blessings to all of you.

Thirumanthiram one of the world's oldest classics. is a very ancient Tamil text authored by world renowned Tamil Saint Thirumoolar.

To propogate its sacred teachings. a public charitable trust has been established by Vidwan Srimath Muthukumaraswami Thambiran Swamigal. its Founder President.

Saint Thirumoolar is a disciple of Nandideva coming in the lineage of Kailasa Paramparai tradition. A powerful compendium of Saiva Agamas and Vedas. the age of the book is estimated as 6000 B.C. Tradition has it that Thirumoolar rendered these 3000 verses at the rate of one song per year.

Saint Thirugyana Sambanda Swamigal who visited the sacred temple at Thiruvavaduthurai in 7th Century AD got a vision of this sacred text lying buried under the temple premises and helped to excavate the same and make it available to the public. Sundara Murthy Swamigal has sung 'we are the devotees of our god Thirumoolar's devotees'.

Thirumanthiram a world classic contained in simple language. is recommended for daily chanting. brings forth the Saiva Siddhantha Sasthra. Teaches Thanthra / Yanthra Sastras. It talks about cures for diseases.

Besides. the Trust will also undertake the following charitable objects keeping in view the present day needs of the society :

- **To establish homes for orphans, aged destitutes and provide them food, education, medical and other facilities.**
- **To establish educational institutions and provide professional training.**
- **To establish hospitals and provide special treatment for leprosy / AIDS and of severe diseases.**
- **To help marriage and inter caste marriages.**
- **To propagate the benefits of vegetarian food, nature food herbal treatment and naturopathy.**
- **To teach Meditation, Asanas, Sasthras, Agamas, etc.**
- **To preserve ancient classics.**
- **To propogate fine arts like dance, music, sculpture, etc.**
- **To develop horticulture, preserve cows and other animals.**
- **To help victims of cyclone, floods, accidents and other natural calamities.**
- **To carry on all activities conducive for benefit of society and national integration.**

Donations given to this public charitable trust will be exempted from income tax under Section 80 G of the Income Tax Act.


We therefore request all those interested in the upliftment of society to take part in the noble activities of the trust.

Yours.

**Vidwan Muthukumaraswamy Thambiran swamigal**

*Founder - President*

*Thirumoolar Mission - Thirumoolar Arulatchi Mandram*



அண்டங்கள் ஓரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்கள் ஐந்தும் பதியாகப்
தெண்டினிற் சத்தி திருஅம் பலமாகக்
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே.

– திருமந்திரம் (2749)

உ

சிவமயம்

ஒன்றே குலம்
ஒருவனே தேவன் !

யாம்பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம் !

THIRUMOOLAR MISSION

## திருமூலர் மிஷன் – திருமூலர் அருளாட்சி மன்றம்

(பதிவு எண் : 471/97)
9, மகாராஜா சூர்யா சாலை, ஆழ்வார்பேட்டை,
சென்னை – 600 018. போன் : 4337947

## வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

**நிறுவனர் – தலைவர்**

பேரன்புடையீர் ! இதயங்குளிர்ந்த நல்வாழ்த்துக்கள் !

உலகத் தமிழ் ஞானியாகிய திருமூலர் அருளிய திருமந்திரம், உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்த நூல்களுள் ஒன்றாகும்; தமிழில் மிகப்பழைய இலக்கியமும் ஆகும்.

உலகம் உய்வதற்காக – பொதுமக்கள் நன்மையை முன்னிட்டுத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை

ஆதீனம் - 22 ஆம் குருமுதல்வர் அவர்களின் பிரதம சீடர் மற்றும் பெரிய பூசை - ஒடுக்கம், வித்துவான் **ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்** ஆகிய நாம் - திருமூலரின் திருமந்திரம் நூலின் உயர்ந்த கருத்துக்களைப் பரப்புவதற்காக ஒரு பொது அறக்கட்டளையை நிறுவி, அதன் நிறுவனத் தலைவராகச் செயல்புரிந்து வருகிறோம்.

நாளது திருமூலராண்டு 7997க்கு ஈஸ்வர ஐப்பசித் திங்கள் அசுவதி - 27ம் நாள் 13.11.1997 வியாழக் கிழமை, சென்னை, தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கில் தொடக்கவிழா நடை பெற்றது.

**நம்மால் நடத்தப்பெறும் சமூகத் தொண்டுகள்:**

- ஆதரவற்ற குழந்தைகள், முதியோருக்கு விடுதி அமைத்து நலமளித்துக் காத்தல், ஏழைகளுக்கு இலவச உடைகள் வழங்குதல்.
- கல்வி நிலையங்கள் அமைத்தல் - தொழிற்கல்வி தந்து வாழ வகை செய்தல்.
- தொழுநோய் மற்றும் எயிட்ஸ் நோயாளர், ஊனமுற்றோருக்கு மருத்துவமனைகள் அமைத்து வைத்தியம் செய்தல்.
- திருமணங்கள் மற்றம் கலப்புத்திருமணங்கட்கும் உதவிகள் செய்தல்.
- சைவ உணவு - இயற்கை உணவு, மூலிகை மருத்துவம் - பற்றி பிரசாரம் செய்தல்.

- யோகாசனம் – தியானப்பயிற்சி மற்றும் வேதாகமப் பயிற்சி அளித்தல்.
- தொன்மையான நூல்கள் அழிந்துவிடாமல் புதுப்பித்து வெளியிடுதல்.
- தோட்டக்கலை வளர்த்தல், பசுக்கள் மற்றும் விலங்குகளை பராமரித்துப் பாதுகாத்தல்.
- சிற்பம் – இசை – ஓவியம் முதலான நுண்கலைகளை வளர்த்து மனித நேயத்தை வளர்த்தல்.
- சமூக நன்மைக்கும் – ஒருமைப்பாட்டிற்கும் தேவைப் படும் பணிகளைச் செய்தல் – பிரசாரம் செய்தல்.
- புயல், வெள்ளம், துன்பம் முதலிய இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு தக்க உதவி செய்தல்.

இவ்வறக்கட்டளைகட்கு கொடுக்கப்படும் நன்கொடைகள், வருமான வரிச்சட்டம் 80G பிரிவின்படி வரி விலக்குக்கு உரியதாகும். ஆகவே சான்றோர்கள் அனைவரும், உலக நன்மை கருதி இந்நற்பணிகளில் ஆர்வமுடன் கலந்துக் கொண்டு பங்கேற்று ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,

**ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

*நிறுவனர் – தலைவர்*

*திருமூலர் மிஷன் – திருமூலர் அருளாட்சி மன்றம்*



நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட யானிருந் தேனே.

– திருமூலர் திருமந்திரம் (68)



ஸ்ரீ [illegible]

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான-பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தோன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்



திருக்கயில்லாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்




*வித்துவான் ஸ்ரீமத்*

## முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்



# திருமூலர்

## ஓர் அறிமுகம்

வித்துவான் ஸ்ரீமத்
முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்

எல்லாம் வல்ல பரம் பொருளாகிய இறைவருளால் பல ஆயிரம் ஆண்டுகள் யோக நிலையில் இருந்து தவம் செய்தவர். யோகியாகவும் எல்லாம் வல்ல சித்தராகவும், பலகலை அறிந்த ஞானியாகவும், அருள் நிறைந்த நாயன்மாராகவும் விளங்கினார்!

இறைவன் பெரிய கருணையினால். உலகுக்கு அளித்த ஆகமப் பொருளை அருந்தமிழ் மறையாய் மூவாயிரம் மந்திரங்களில் நமக்குத் தந்துள்ளார்.

திருமந்திரம் 10-ஆம் திருமுறை. தோத்திரமாகவும், சாத்திரமாகவும், யோகநூலாகவும், ஞானநூலாகவும், மருத்துவ நூலாகவும், எந்திரநூலாகவும், தந்திர நூலாகவும், மந்திரங்கள் அமைந்த பாராயண நூலாகவும், சமய, சமூக, ஒருமைப்பாட்டு நல்லிணக்க நூலாகவும் திகழ்ந்து உலகுக்கு உயிராக விளங்குகிறது திருமந்திரம். "இறைவனே தமிழொடு-வடமொழியிலும், ஆரியத்தொடு தமிழிலும் உடனே சொல்லிக் காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்கிறார் முத்தமிழ் வேதம் தத்துவம் சதாசிவம்.

திருமூலர் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இவர் இயற்பெயர் சுந்தரர். தமிழகத்தில் பொதிகை மலையில் - அகத்தியர் - தமிழ்ச் சங்கத்தில்

உலக நூல்களைக் கற்றார். பின், கயிலைக் குருகுலம்சென்று, ஞான நூல்களான அருமறைகள். ஆகமங்களை நந்தியெம்பெருமானிடம் கற்றார். நந்தி அருளால் 'நாதன்' என்ற பட்டம் பெற்று, சுந்தர நாதர் ஆகித் தவம் செய்தார். கயிலையில் இவருடன் பாடங்கேட்டவர்கள்: சனகர் - சனந்தனர் - சானாதனர் - சனற்குமாரர். பதஞ்சலி, வியாக்கிரபாதர் - சிவயோக மாமுனிவர் ஆகிய ஏழுபேருடன், தானும் உடனிருந்து கற்றதாக அகச் சான்று கூறுகிறார்.

பதஞ்சலி - வியாக்கிர பாதருடன் இவர் தில்லைக்கு வந்து திருக்கூத்து தரிசனம் செய்தார். மீண்டும் கயிலை சென்றார். பதஞ்சலி வியாக்கிர பாதர் இருவரும் தில்லையிலே ஆசிரமங்கள் அமைத்துக் தங்கிவிட்டனர். தில்லைக் கோபுரத்தில் - திருமூலர்சிலையை காணலாம்.

இரண்டாவது முறையாக அகத்தியரைக் காண பொதிகை நோக்கி வருகிறார். 'குறு முனிபால் உற்ற தொரு கேண்மையினால் உடன் சில நாள் உறைதற்கு, நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக் கொண்டார்' என்கிறார் சேக்கிழார்.

பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், விளங்குபவர் இறைவன் இதனை மணிவாசகர்,

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே!

பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!, என்கிறார் மாணிக்கவாசகர்.

"உலகில் முதலில் தோன்றியநாடு தமிழ்நாடு. முதலில் தோன்றிய மனிதன் தமிழர். முதலில் தோன்றிய மொழி - தமிழ்மொழி!" - என்று மேலை நாட்டவரான சர்ஜான்-மார்ஷல், ஸ்பெயின் தேசத்தவரான ரெவரண்டு ஈராஸ் பாதிரியாரும் கூறினர்.

நம் இந்தியப்பிரதமர் நேருவும், தன் மகளுக்குக் கடிதங்கள் (Letters to the Daughter) என்ற நூலில், "நம் இந்திய நாட்டை - வடக்கிலிருந்து படிக்கப் பழகிவிட்டோம். தெற்கிலிருந்து படித்தால்தான், நம் தேசத்தின் பழமையும் - நாகரிகப் பெருமையும் தெரியும்" என்று கூறி உள்ளார்.

உலகின் நாகரிகத் தொட்டில்களுள் பழமையானது. அரப்பா, மோகிஞ்சதாரோ எனும் இடங்களாகும். அவை பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டன. (5000கி.மு) அவை தமிழ் நாகரிகத்தை வெளிப்படுத்துவதுடன் ஆரியர் இந்தியாவுக்கு வருமுன்னரே இருந்ததென்றும் அக்கட்டிடங்களில் காணப்பட்ட உருவ எழுத்துக்கள் தமிழை ஒத்திருந்தன என்றும் அது கற்காலத்துக்கும், செப்புக்காலத்துக்கும் (Neo Lithie Age) Coper Age)) இடைப்பட்ட காலம் என்றும் தமிழருக்கே உரிய மூக்கு அணிகளும் 'தாலி முதலிய கழுத்து அணிகளும் அக்கட்டிடங்களில் காணப்பட்டன என்றும் அங்குள்ள எழுத்துக்கள் தமிழையே ஒத்திருக்கின்றன என்றும் கூறினர்.

பிற்காலத்தில் நம் அண்ணாமலைப்பல்கலைகழகம் ரெவரண்டு ஹீராஸ் பாதிரியாரை அவர்தம் முதிர்ந்த வயதில் அழைத்துப் பாராட்டியது. அப்போது அவரிடம் கையெழுத்து

வாங்கிய மாணவரிடம், I am a Dravidian Comming from Spain ('நானொரு தமிழன் - ஸ்பெயின் தேசத்திலிருந்து வருகின்றேன்) என்று எழுதிக் கையெழுத்துப் போட்டு உள்ளார்.

நிலங்களையும் மலைகளையும் ஆராய்ந்த மேனாட்டு விஞ்ஞானிகள் குமரிக்கண்டப் பகுதியே உலகில் முதலில் தோன்றிய பகுதி என்றும். குமரியில் உள்ள மருத்துவாமலையே உலகில் மிகப்பழைய மலை என்றும் கூறுகின்றனர்.

உலக மொழிகளை ஆராய்ந்த 'கால்டு வெல்' அவர்களும் உலகின் முத்த மொழியாக தமிழே இருக்க முடியும். ஏனெனில் தமிழ்ச் சொற்கள் உலக மொழிகள் அனைத்திலும் உள்ளன என்கிறார். அவர்தம் கருத்தமைந்த தமிழ்ப்பாடல்:

உலகில் உதித்த முதல் மனிதன் ஓதும் மொழியாய்ச் சிறப்புற்றாய், அலகில் மொழிகள் பலவிற்கும் அன்னையாகி இளமை நலம், நிலவும் தமிழே எம்முயிரே நெஞ்சத்தினிக்கும் முக்கனியே, குலவும் வாழ்வின் உயிரசத்தே கொஞ்சும் தமிழே வாழியவே!

தமிழகத்தில் பொதிகைக் குரு குலத்தில் அகத்தியருடன் இருந்து தமிழும், யோகமும் பயின்றவர், சுந்தர நாதர். பின்னர் கயிலைக் குருகுலம் சென்று - கயிலை நாதர், தென்முகக் கடவுள் சிவபிரானிடமும், நந்தியம் பொருமானிடமும் பாடம் கேட்டார். உடனிருந்து பாடம் பயின்றவர்கள்...

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்

நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி

மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்று என்னோடு எண்மரும் ஆமே!

சனகர் - சனந்தனர், சனாதனர் - சனற்குமாரர், சிவயோக மாமுனிவர் வியாக்கிர பாதர் - திருமூலர் ஆகிய எண்மரும் கயிலைக் குருகுலத்தில் அருமறைகளைக் கேட்டனர்.

நந்தியருள் பெற்ற யோகியாம் - சுந்தர நாதர் - முன்பு பொதிகையில் குறுமுனி அகத்தியர்பால் கொண்ட நட்பினால், அவரைக் காணுதற்கும் சில நாள் அவருடன் உறைவதற்கும் பொதிய மலை புறப்பட்டார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

மற்றவர் தாம் அணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்

கொற்றவனார் திருக்கயிலை மலை நின்றும் குறுமுனி பால்

உற்றதொரு கேண்மையினால் உடன் சில நாளுறைதற்கு

நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்.

என்கிறார்.

முதன்முதலில் ஒரு தமிழ் முனிவர் தமிழகத்தில் பொதிகையில் இருந்து கயிலை சென்று, கயிலையில் பெருமானிடம் அருமறைகளைக் கேட்டு,

திருக்கேதாரம் வழிபட்டு - பசுபதி நேபாளம் பணிந்து, அரத்துவாரம் வந்து, காசியில் நீராடி பருப்பதம், திருக்காளத்தி பணிந்து பின்காஞ்சியிலே பலகாலம் தங்கினார். பின் திருவதிகைகண்டு கறைக்கண்டன் அற்புதக்கூத்தாடும் திருத்தில்லையில் ஆனந்தக் கூத்தன் அருள் பெற்றுப் பசுபதியார் அமர்ந்து உறையும் திருவாவடுதுறை வந்து தங்கி இன்புற்றுப், பின் பெருமானை பிரிய மனமின்றி அங்கிருந்து புறப்பட்டார். காவிரிக்கரையில் பசுக்கள் புலம்புவதைக் கண்டார். ஆமேய்க்கும் மூலன் என்பான் வினை முடிந்து இறந்து கிடந்தான். மூலன் எழுந்தால் அன்றி, பசுக்களின் கண்ணீரை மாற்ற இயலாது என் அறிந்து, தன் உடம்பைப் பாதுகாத்து, அந்த மூலன் உடம்பின் - பவன வழியில் (பரகாயப் பிரவேசம் - கூடுவிட்டு கூடு பாய்தல் என்ற சித்தியினால்) தன் உயிரை பாய்ச்சி, - திரு மூலராய் எழுந்து, பசுக்களின் துயரைத் துடைத்தார். பின் வரலாறு அறிந்ததே! பாதுகாத்து வைத்த தன் உடல் மறைந்ததும், மூலன் உடம்பிலேயே தங்கி விட்டார். பின்னர் - மனைவி - ஊரார் அழைத்தும் மறுத்துவிட்டு, பொது மடத்தில் தங்கினார். பின் அங்கிருந்த படர் அரசமரத்தின் நிழலில் தங்கித் தவமிருந்தார். "சேர்ந்திருந்தேன் சிவபோதி நீழலில் - சேர்ந்திருந்தேன் இவன் நாமங்கள் ஓதியே" என்கிறார். மூவாயிரமாண்டுத் தவமிருந்து 'திருமந்திரமாலை' எனும் நூலைத்தந்தார்.

ஊனுடம்பில் பிறவி விடம் தீர்ந்து உலகத்தோர் உய்ய

ஞான முதல் நான்குமலர் நற்றிருமந்திர மாலை

பான்மை முறை ஓராண்டுக் கொன்றாகப் பரம் பொருளாம்

ஏன எயிறணிந் தாரை ஒன்றவன்தான் என எடுத்து

"முன்னிய அப்பொருள் மாலைத் தமிழ் மூவாயிரம்சாத்தி, மன்னிய மூவாயிரத்தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து, சென்னிமதி அணிந்தார் தம் திருவருளால் திருக்கயிலை தன்னில் அணைந்து ஒருகாலும் பிரியாமைத் தானடைந்தார்."

எண் குணத்து ஈசனிடம் அட்டமா சித்திகளை அடையப் பெற்றவர் திருமூலர்.

திருமந்திரம் - ஒன்பது தந்திரங்களை உடையது

"தேவர் குறளும் திரு நான்மறை முடிவும்

மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை

திருவாசகமும் திருமூலர் சொல்லும்

ஒருவாசக மென்றுணர்" - என ஔவை மூதாட்டி ஏனைய பெரு நூல்களுடன் சேர்த்துக் கூறுவதும் சிந்திக்கத்தக்கதாகும். பாடலின் இறுதியிலே திருமூலர் சொல் வைக்கப்பட்டிருந்தாலும், மேலே கூறப்பெற்ற நூல்களின் கருத்தெல்லாம் இதனுள் அமைந்து விளங்குகின்ற - காலத்தால் மூத்த நூல் திரு மந்திரமாகும்.

நான்மறைகளை வகுத்துத் தொகுத்தவர் வியாசர் என்றால், திருமுறைகளை வகுத்துத் தொகுத்தவர், - தென்னாட்டு வியாசராகிய நம்பியாண்டார் நம்பிகள் ஆவர். வியாசர் ஆரிய வேதங்களின் சிக்கை அறுத்தது போலவே நம்பியாண்டார் நம்பிகள் வடமொழி தென்மொழி வேதங்களின் ஐயங்களை நீக்கியுள்ளார்.

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பை புக்கு, முடி மன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின், படிமன்னு வேதத்தின் சொற்படியே பரவிட்டென்றுச்சி, அடிமன்ன வைத்த பிரான் மூலனாகின்ற அங்கணனே:

என்று தமிழ் வியாசர் நம்பியாண்டார் கூறுகிறார்.

### திருமூலர் காலம் : வட்டெழுத்துக் காலம்

தான் மறைத்து வைத்த உடலைக் காணாது, மூலனின் உடல் புகுந்த சுந்தரநாதர் - திருமூலராகி, இறை தந்த ஆகமப் பொருளை தமிழில் செய்ய வேண்டி, இறைவனே தனது உடலை மறைப்பித்தார் என்று தன் ஞான உணர்வால் தெளிந்து திருமந்திரம் செய்யத் திருவாவடுதுறையிலேயே தங்கிவிட்டார்.இராமாயண காலத்தவரான - வசிட்டர் தன் தங்கையை வியாக்கிர பாதருக்கு மண முடித்தார். அவர் மகன் உபமன்னியு என்பவர். இராமாயணகாலம் கி.மு. 6000 என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. எனவே திருமூலர் காலம் கி.மு. 6000 என்பது துணிபு.

திருமூலர் திருமந்திரத்தில் தமிழ்மொழிக்கு, 16 உயிர்களும் 35, மெய்களும் ஆக 51 எழுத்து எனக் கூறுகிறார். அதுதான் இடைச்சங்க ஆரம்பகாலம். கபாடபுரத்தில் நடந்தது. மன்னன் வெண்டேர்ச் செழியன் வட்டெழுத்துக் காலம். அப்போது தொல்காப்பியர் - 51 எழுத்துக்களை 12-உம், 18-உம் ஆக 30 எழுத்தாகச் சுருக்கினார். தொல்காப்பியம் என்ற புதிய இலக்கண நூலை, திருவிற்பாண்டியன் என்ற அனந்த குணபாண்டியன் காலத்தில் அரங்கேற்றினார்.

திருமூலர், பாரத சண்டை முடிந்து கி.மு 3100-ல் பொதியமலை புறப்பட்டார் என்பதை புராண வரலாறு கூறுகிறது.

உலகமக்கள் கையினால் சாடை காட்டிப் பேசிய காலத்தில் - முதல் முதலில் நாவை அசைத்துப் பேசிய மொழி தமிழே என்று அகத்தியர் கூறுகின்றார்.

"வையம் ஈன்ற தொன்மக்கள் உளத்தினைக் கையினால் உரை செய் காலம் இரிந்திடப் பைய நாவை அசைத்த பசுந்தமிழ், ஐயை தான் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.
-பேரகத்தியம்

- அகத்தியர்.

சிவன் தந்த தமிழை அகத்தியர் தந்தார் என்கிறார்

- கம்பர்.

உழக்கு மறை நாலிலும் உயர்ந்து லகம் ஓதும்

வழக்கினு மதிக்கவி யிறு மரபின், நாடி

நிழற்பொலி கணிச்சி மணி நெற்றியுமிழ் செங்கண்

தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்

கம்பர் - அகத்தியப்படலம்

பைய நாவை அசைத்த மொழி வளர்ந்த வரலாறு.

மூத்த முதல் மொழியான தமிழ் மொழியானது, முதலில் உருவ எழுத்துக்களையும், பின் கோல் எழுத்துக்களையும், பின் வட்ட எழுத்துக்களையும், பின் சதுர எழுத்துக்களையும் கொண்டு மாறுதல் அடைந்து வளர்ந்து வந்துள்ளது என்பது ஆய்வாளர் முடிவு.

1. உருவ எழுத்துக் காலத்தில் தான் - தமிழிலிருந்து, சீனம், கடாரம், சுமேரியம், பினிசியம் எகுபதியம் முதலிய பல மொழிகள் பிரிந்தன.

2. கோல் எழுத்துக் காலத்தில் தமிழில் இருந்து - மராட்டியம், வங்கம், கோசலம், பலுச்சியம், ஆரியம், பாளி, பிராகிருதம் முதலிய பல மொழிகள் பிரிந்தன.

3. வட்ட எழுத்துக்காலத்தில் தமிழில் இருந்து, - தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தன.

("நினைவுக்கு" கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்) உன் உதரத்து உதித் தெழுந்தே" என்று திருமந்திரம் கூறுகிறது.

பேராசிரியர் - சுந்தரம்பிள்ளை கூறுகிறார்.

4. தமிழுக்குத் தற்காலம் சதுர எழுத்துக்காலம்.

திருமூலர் காலத்தில் - தமிழக எல்லை!

"வடாஅது பனி படு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணா அது கரை பொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்று முதிர் பவ்வத்தின் குடக்கும்."
- புறநானூறு

"இமய முதல் குமரிவரை ஒரு மொழிவைத் துலகாண்ட சோழன் மணற்கிள்ளி நற்சோணையின் மகன் சேரன் செங்குட்டுவன்'' என்று சிலம்பு கூறுவதால், கி.பி. இரண்டாம் நூற்றாண்டுவரை, தமிழருக்கு வட எல்லை இமயமாக இருந்தது. இன்றும் வட நாட்டில் ஏராள ஊர் பெயர்கள் தமிழாகவே உள்ளது.

இராமாயணம் - வால்மீகத்தில்

தசரதன் அவையில் - சோழர் அலங்கரித்தார் என்றும், இராமன், அநுமனை நோக்கி, - தென் திசைக்கு, சீதையைத் தேடப் போகும் போது, முத்தினால் தோரணவாயில் அமைக்கப்பட்ட பாண்ட்ய தேசத்துக்குள் நுழையாதே - அங்கு கலைகள் வளர்க்கும், சபைகள் இருப்பதால் அங்குத் தங்கி - விடுவாய் - சீதையைத் தேடும் பணியை மறந்து விடுவாய் என்ற கருத்துப்பட - செய்திகள் உள்ளன என்று அறிஞர் கூறுவர்.

சீனாவில் சில ஆண்டுகட்கு முன் துறைமுகப்பகுயில் அகழ்வாராய்ச்சி செய்தபோது, சம்பந்தாண்டான் என்ற வணிகர், நரசிம்மர் சிலை, துர்கைசிலை, சம்பந்தர் - சிலையுடன் அரசமரக்கிளையோடு திருமூலர் சிலை - அடியில், "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்ற முழுப்பாடலுடன் ஒரே கல்லாகக் கிடைத்துள்ளது. காலம் 14 ஆம் நூற்றாண்டு.

1976-ல் பிரான்ஸ் நாட்டில், திருமூலர் கருத்து பரப்பும் மடங்கள் 7 அமைக்கப்பட்டுள்ளது.

மூவேந்தர்கட்குப்பிறகு

தமிழகத்திருமடங்கள் - தமிழ்புலவர்களை ஆதரித்து - தமிழ்ச்சுவடிகளைப் பாதுகாத்துத் தமிழ் வளர்த்தன திருவாவடுதுறை ஆதீனம் திருமுறைகள், சங்க இலக்கியங்களை எல்லாம் பாதுகாத்தது.

திருமூலர் வழி கடைசிச் சித்தர், திருமாளிகைத் தேவர் குருமூர்த்தத்தின் பக்கத்தில்தான், ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் குரு மூர்த்தம் உள்ளது. போகர் திருவடியும் உள்ளது.திருவாவடுதுறை ஆதீனம் 21-ஆவது குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களும். எமது குருநாதராகிய 22-ம் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகளும் 1951 முதல், திருமந்திர மாநாடுகள் கூட்டியும், திருமந்திர உரைநூல்கள் ஏராளமாக இலவசமாக வெளியிட்டும், திருமூலர் - திரு மந்திரக் கருத்தைப் பரப்பினார்கள்

அடுத்து, தருமை யாதீனம், திருப்பனந்தாள் காசிமடம், சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சைவசிந்தாந்தப் பெருமன்றம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், ஆகியவை திருமூலர் - திருமந்திர நூல் வெளியிட்டுப்பரப்பினார்கள்.

இப்போது நாம் தொடங்கியுள்ள திருமூலர் மிஷன், திருமூலர் அருளாட்சி மன்றம், தொடக்கவிழாவை.... ஒரு மாத கால அவகாசத்திலே நிறைவாகப் பூர்த்தி செய்தவரும், இறையருட் செல்வரும், "திருப்பணி குடமுழுக்குச்செம்மலுமான" ரோட்டரி திருவாளர் கா.முருகேசன் (தலைவர். கு.தொ.வே.கூ.வங்கி.) அவர்களுக்கும், இந்நூலின் பதிப்பாசிரியர் தெய்விக, தேசிய, திரைப்பட இலக்கியங்களை 40 ஆண்டுகளாக எழுதிவரும் "சுடர்மணிக்கவிஞர்" திருவாளர், வேம்பத்தூர் கிருஷ்ணன் அவர்களுக்கும், அட்டைப்படம், திருமூலர்மிஷன் சின்னங்களைஅழகுற அமைத்துள்ள ஓவியஇளைஞர் T. சின்னராசு ஆகியோருக்கும், விழாவிலே பெரும் பங்குகொண்டு சிறப்புறப் பூர்த்தி செய்துள்ள திருவாளர்கள் Dr. A.V.G. ரெட்டி, பிலிம்நியூஸ் ஆனந்தன், அவரது திரு நிறைச் செல்வர் ரவிசாகர், முதலான அன்பர்களோடு, விழா மற்றும் திருமூலர் நூலுக்கு உழைத்த சகல மெய்யன்பர்களுக்கும், ஸ்ரீ நமசிவாயமூர்த்தியின் குருவருளும், ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் பேரருளும் நிறைந்து திருமூலர் ஞானம், வளமானவாழ்வு கூடி இன்புற்று வாழவேண்டிச் சிந்திக்கின்றோம். எல்லோர்க்கும் நமது இதயம் குளிர்ந்த நல்வாழ்த்துக்கள்.

வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித்தம்பிரான்

உ



# திருமூலர் திருவருள்

"ஆன்மிகரத்னா", சுடர்மணிக்கவிஞர்
**வேம்பத்தூர் கிருஷ்ணன்**

அருள் தரும் ஆலயங்களும், ஆன்மிகப் பேரவைகளும், பொருள் வளமிக்க திருவாவடுதுறை, தருமபுரம் முதலான சைவ சித்தாந்த ஆதீன மடாலயங்களும், பூமியிலுள்ள சர்வ சமய சன்மார்க்க அமைப்புகளும், பாமரரும், பண்டிதரும், கொண்டாடிப் போற்றிப் பலன் பெறும் - பெற வேண்டிய - ஒரே புனித நூல், **திருமந்திரமேயாகும்.**

அந்தத் திருமந்திரத்தையே உலகுக்குத் தந்து, தெய்விகத் திருவருளை மாநுடம் அனைத்திற்கும் பொதுவாக்கிய மஹா பெரியவர் **ஸ்ரீ திருமூலர்.**

திருமூலர் பற்றிய சரியான வரலாறும், திருமந்திரத்தின் புகழ்மிக்க செயல்பாடுகளும் உள்ள நல்ல பதிப்புகளோ, ஆரம்ப உயர்நிலை பள்ளிப் பிள்ளைகளுக்கான தரமான வெளியீடுகளோ உரிய வகையிலே இல்லாததால்....

இன்றைய நாற்பது, ஐம்பது வயதினருக்குக் கூட... "யார் அந்தத் திருமூலர்?", "என்னதான் சொல்கிறது திருமந்திரம்?" எனும் ஐயப்பாடு பெரும்பான்மையாக இருப்பது, தமிழ் வளர்ச்சிக்கோ, தமிழர் வளர்ச்சிக்கோ உகந்ததல்ல !

அமிழ்தினும் இனிய தமிழ் மொழிக்கு, ஆதி இலக்கண கர்த்தா, அகத்தியர். அகத்தியம் காட்டிய இலக்கணத்திற் கேற்ப அருமையான இலக்கியங்களை... பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, வெவ்வேறு காலகட்டங் களிலே... மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்து மொழி வளர்த்த நெடிய வரலாற்றினை சைவச் சான்றோர் பலரது புள்ளி விவரங்களை வைத்துச் சுருக்கமாக நினைவூட்டு கின்றேன்.

ஆதிமுதல், நாளது தேதிவரை, அகில உலகிலும் சுமார் இரண்டாயிரம் மொழிகள் தோன்றி..., பலப்பல மொழிகள் காலவெள்ளத்திலே கரைந்து விட்டிருக்கின்றன; சில வேறு மொழிகளின் பெயர்கள் கூடக் காணாமற் போய்விட்டன ! கிரேக்க, எகிப்திய, வட இந்திய புராதன மொழிகள் பல, வழக்கிலே இருந்தாலும்..., அந்த நாள் முதல் இந்த நாள் வரை நிலையான இலக்கண இலக்கியங்களோடு இருப்பவை... தமிழ், சீனம் முதலான ஓரிரு மொழிகளே ஆகும்.



ஆதித்தமிழ் முனிவர் அகத்தியரும், ஆதிக்கும் ஆதியான ஔவையாரும் அறம், பொருள், இன்பங்களை... குறளாகத் தந்த திருவள்ளுவரும்... தமிழின்

தொன்மையை, வாய்மையை, தனித் தன்மைகளைப்பலவாறு விளக்கியுள்ளனர்.

*"வையம் ஈன்ற தொன் மக்கள் உளத்தினைக்*
*கையினால் உரைசெய் காலம் இரிந்திப்*
*பைய நாவை அசைத்த பசுந்தமிழ்*
*ஐயை தாள் தலைக்கொண்டு திருத்தொண்டு*
*பரவுவாம்."*

*– அகத்தியர்*

தேசிய மஹாகவி ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் பாடுகிறார்...

*"யாமறிந்த மொழிகளிலே..*
*தமிழ்மொழிபோல் இனிதாவது*
*எங்கும் காணோம்...*
*தேமதுரத் தமிழோசை*
*உலகமெலாம் பரவும் வகை*
*செய்தல் வேண்டும்"*

சத்தியக் கவிஞரின் சாகாவரம் பெற்ற சாசனக் கவிதையிது.

**"உலகில் முதன்முதலில் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு; அவர்கள் வாய் திறந்து முதன் முதலில் பேசிய மொழி தமிழ்மொழி"** முத்தமிழ்க் காவலர், அமரர் ஸ்ரீ கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்களின் தீர்ப்பு இது.



அனைத்துலகுக்கும் மூத்த முது மொழியாக விளங்குவது தமிழ் தான்



என்பதை மேலை நாட்டு மொழி அறிஞர்களான திருவாளர்கள்... கால்டு வெல், ரைஸ் டேவிஸ், மாக்ஸ் முல்லர், பெஸ்கி பாதிரியார், ஹீராஸ் பாதிரியார்... முதலான பலப்பல மொழியாராச்சி நிபுணர்கள் உறுதி செய்துள்ளனர்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இப்போதைய இமயமலை கடலாகவும், குமரிக்கடல் நிலமாகவும் இருந்ததற்கான ஆதாரங்கள் புராண இதிகாசங்களோடு, ஆதாரபூர்வ வரலாற்றுக் காப்பியமான சிலப்பதிகாரத் திலும் இதோ...

> *''வடிவே லெறிந்த வான்பகை பொறாது*
> *பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
> *குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள..''*
>
> *– ''காடுகாண்காதை''*

நவீனயுக விஞ்ஞான பூர்வ ஆராய்ச்சியின் சான்றுகளாக, நேபாள நாட்டின் தரைவழிப் பாதையிலே மலையின் குறுக்கு வெட்டுப் பகுதியிலே மிகப்பெரிய மீன் எலும்புகளும், கிளிஞ்சல் கூடுகளும், இமயமலைத் தொடரின் சிகரங்களிலே பல்லாயிர வருடங்களுக்கு முந்தைய கடற்பாசிப் படிவங்களும், ராட்சத வடிவ கடல்வாழ் உயிரின எலும்புக் கூடுகளும்... உள்ளங்கை நெல்லிக்கனிச் சாட்சிகளாக இன்றும் காணக்கிடக் கின்றன.

கடல் மலையானதும், மலை கடலான விபரமும் தொன்மைத் தமிழ் வரலாற்றுக்கு அவசியமாகிறது. இரண்டு சங்கங்களை கடல் விழுங்கிய விபரம் இதோ.

ஆதித்தமிழ் இலக்கண மகுடமாக விளங்குவது "இறையனார் களவியலுரை" ஈஸ்வரனே இதன் கர்த்தா என்றும்... "நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்று அவனிடமே வாதிட்ட நக்கீரர் பெருமானுக்கும் இதில். பங்குண்டு என்றும் சொல்லப்படுகிறது. அந்த இறையனார் களவியலுரை யிலே உள்ள விபரப்படி...

**முதற் சங்கம்**

குமரிமுனைக்குத் தெற்கே... இருந்த ஆதித் தென்மதுரை யிலே, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே உருவானது முதல் தமிழ்ச் சங்கம்.

ஆதித் தென் மதுரையை **காய்சினவழுதி** முதலாக **கடுங்கோன் பாண்டியன்** வரை 89 மன்னர்கள் ஆண்டு... மொழியை ஆதரித்தனர்.

முதல் தமிழ்ச் சங்கத்து முன்னிலைப் புலவர்களாக... திரிபுர மெரித்த விரிசடைக்கடவுளும், தேவர் தம் குறை தீர்த்த ஆறுமுகப் பெருமானும் இருந்திருக்கின்றனர்.



அகத்தியர் முதலாக 549 புலவர்களில் தொடங்கி, காலச் சுழலிலே.. 4449 புலவர்கள் ஏராளமான இலக்கியங் களைப்



படைத்திருக்கிறார்கள். முதல் இலக்கண நூலாகிய அகத்தியம் காட்டிய நெறியிலே பரிபாடல், முதுநாரை, முது குருகு, களரியாவிரை முதலான நூல்களோடு, 4440. ஆண்டுகள் தழைத்த முதற் தமிழ்ச் சங்கத்தை கடல் கொண்டது.

## இரண்டாம் தமிழ்ச்சங்கம்

தென்மதுரையை அடுத்து உருவான கபாடபுரத்திலே.. வெண்டேர் செழியன் எனும் பாண்டியனில் தொடங்கி.. முடத்திருமாறன் வரையிலே 59 பாண்டியராஜாக்களின் பராமரிப்பிலே இடைச்சங்கம் நிலைத்தது.

அகத்தியர், தொல்காப்பியர், வெள்ளூர் காப்பியன், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, சிறுபாண்ட ரங்கன், திரையன்மாறன், துவரைக்கோன், கீரந்தை.. முதலான 59 புலவர்களோடு தொடங்கி, காலச்சுழலிலே மூவாயிரத் துக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்களால் ... கவி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை, அகவல் எனப் பலப்பல இலக்கியங்களை உருவாக்கி மொழி வளர்த்த இடைச் சங்க கபாடபுரமும், 3700 ஆண்டுகள் நிலைத்திருந்து, திடீரென்று பொங்கியெழுந்த கடலிலே கரைந்து மறைந்தது.

## மூன்றாம் சங்கம்

மூன்றாவது தமிழ்ச்சங்கம் தற்போது "மதுரை" என அழைக்கப்படுகின்ற நான்மடக் கூடல் திருநகரிலே ஏற்பட்டது. அப்போதைய அதன் பெயர் **"உத்தர மதுரை"** ஆகும்.



முடத்திருமாறன்.. முதலாக உக்கிரப் பெருவழுதி வரையிலான 49 – பாண்டிய மன்னர்கள் உத்தர மதுரையின் ராஜாக் களாகத் திகழ்ந்தனர்.

சிறு மேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்கிழார், மருதளிள நாகனார், இளந் திருமாறன், நல்லந்துவனார், கணக்காயர் மகனார், நக்கீரர்.. முதலான 49 புலவர்கள் இருந்து தமிழ் வளர்க்கத் தொடங்கி..., காலச் சுழலிலே மொத்தம் 449. புலவர்கள் உருவாக்கிய இலக்கியங்களிலே... அகநானூறு, புறநானூறு, ஐங்குறுனூறு, பதிற்றுப் பத்து, நற்றிணை நானூறு, நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, எழுபது பரிபாடல், நூற்றைம்பது கலி முதலான பல்லாயிரக் கணக்கான இலக்கியச் செல்வங்களாம். காலப் புயலாலும், இருமுறை ஏற்பட்ட கடற்குமுறலாலும் அழிந்தவை போக, இன்று நமக்கு எஞ்சிய நூல்கள் மிகச் சிலவேயாகும்.

## இப்போதுள்ள நான்காம் தமிழ்ச்சங்கம் ... !

மாவீர சேது சமஸ்தான வாரிசுகளான ஸ்ரீ பாஸ்கர சேதுபதிகளின் பேராதரவுடன், 1901–செப்டம்பர் 15–லில் மதுரை சேதுபதி பள்ளியில் நான்காம் தமிழ் சங்கத்தை தொடங்கினார் ஸ்ரீ பாண்டித் தேவர். சீரழிந்து கிடந்த சங்க நூல்கள் செப்பனிடப்பட்டன ! ஆனால் ... 1920–லே அரிய பல இலக்கியச் சுவடிகளை – ஆய்வு நூல்களை – தீயிலே பறி கொடுத்து 97வயது கிழவியாக தட்டு தடுமாறிக் கொண்டிருக்கிறது மதுரை தமிழ் சங்கம்.

இடைச்சங்கத்திலே எஞ்சிய ஒரே இலக்கணமான தொல்காப்பியம், கடைச்சங்கத்து எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதிணென்கீழ்கணக்கு முதலானவையே...! அந்த நூல்களின் பட்டியல் பாட்டு இதோ...

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தோர் ஏத்தும் கலியோ டகம்புறமென்ற
இத்திறத்த எட்டுத் தொகை.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலைகடாத் தொடும் பத்து.

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால் கடுகங் கோவை பழமொழி, மாமூலம்
இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பனவும்
கைந் நிலையும் ஆம் கீழ்க் கணக்கு.

ஆழி சூழ் உலகத்து மூத்த முதுமொழியாகிய தமிழின் தொன்மைக்குச் சாட்சியங்களான சங்க நூல்களுக்கும் முந்தைய தனித் தமிழ்த் தங்க இலக்கியம் ஒன்று உள்ளது! அதுதான் **திருமூலரின் திருமந்திரம்.**



திருமந்திரத் திருமூலரும், தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியரும் நண்பர்கள்! பொதிகை மலையிலே முருகனருட் தமிழ்ச் சங்கத்திலே ஒரு சாலை மாணாக்கர்கள்; பாடம் கேட்ட



பருவத்திலே திருமூலரின் பெயர், **சுந்தரநாதர்.**

சிவாகமம் சிறப்புதற்காக வடகயிலைக்கு சுந்தரநாதரை (திருமூலரை) அனுப்பியதே அகத்தியர் தான். சிவகணத்தின் சேனாதிபதியும், சித்தர்களுள் முதல் வருமான நந்தியம் பெருமானிடம் ஆகமபாடம் கேட்டு தட்சிணத்திற்குத் திரும்பிய சுந்தரநாதன், அட்டமா சித்திகளையும் பெற்று.. ஆயகலைகளையும் கற்று.. சிவ மஹா யோகியாகத் திருத்தலம் பலவற்றைத் தரிசித்தபடி திருவாவடு துறையில் உள்ள சாத்தனூர் கிராமத்தை அடைந்தார்.

வயல் வெளியிலே ஆவினம் மேய்க்கும் குலத்தவரான (இடையர்) "**மூலன்**" என்பவர் திடீரென மரணம் அடைகிறார். ஆவினம் (மாடுகள்) கதறுகிறது. அவற்றின் துயர் தீர்ப்பதற்காக... கூடுவிட்டுக் கூடு பாய்கிறார் சுந்தரநாதர். மேய்ப்பவன் எழுந்ததும் துள்ளி மகிழ்ந்தன ஆவினம். அந்திப் பொழுதிலே ஆவினத்தை அதனதன் இடத்திலே விட்டு விட்டுக் கூட்டைத் தேடினார் சுந்தரநாதர். இறையருளால் திருமேனி மறைந்து விடவே... மூலனின் உடம்போடு மூவாயிரம் ஆண்டுகள் பூமியிலே இருந்து ஆண்டுக்கு ஒன்றாக "**தமிழ் மூவாயிரத்தை**" உருவாக்கினார். அது முதல் சுந்தரநாதர், திருமூலர் ஆனார்.

18.03.1996 -முதல் 13 வாரங்கள் சென்னைத் தொலைக் காட்சியில் ஒளிபரப்பான (T.V. தொடர்) "அறுபத்து மூவருலா" வின் கதை, வசனம், பாடல்களை அடியேன் (வேம்பத்தூர் கிருஷ்ண்ன்)

எழுதியிருந்தேன். அத்தொடரிலே அறுபத்து மூவருள் முதல்வராக திருமூலரைத்தான் எழுதினேன். அந்த ஆராய்ச்சியிலே கிடைத்த அற்புதங்கள் ஏராளம் ! இதிகாச புராணங்களிலே புரியாத பல புதிர்களுக்குத் திருமூலர் வரலாற்றிலே விடைகண்டு வியந்தேன்.

சைவ சமயத்துப் **பன்னிருதிருமறைகளிலே** முதல் திருமுறையாக இடம் பெறவேண்டிய திருமந்திரம், பத்தாம் திருமுறையாகத் தடம் புரண்டதற்குக் காரணம் உண்டு !

ஆதியிலே தோன்றி, காலச் சூழலால் திருவாவடுதுறை ஆலயத்துள் மறைந்து கிடந்த திருமந்திரச் சுவடிகளை, ஏழாம் நூற்றாண்டு (திருஞான சம்பந்தர் கி.பி. 601 - 650) வந்து தான் மீட்டிருக்கிறார்.

சித்தர் பெருமானாகவும், சிவமகா யோகியாகவும், பக்திப் பயிர் வளர்த்த நாயன்மார்களுள் முதல்வராகவும் விளங்கும் திருமூலரின் பெருமையும் அவரது திருமந்திரத்தின் அருமையும் அளவிடற்கரியதாகும்.

தமிழ் வழங்கும் இடமெல்லாம் திருமந்திரஒலி முழங்கவும், தமிழர் புழங்கும் நாடுகளிளெல்லாம் திருமூலரின் வரலாறு விளங்குவதற்காகவுமே... திருமூலர் அருளாட்சி மன்ற''த் தையும், உலக அளவிலே ஆன்ம நேய திவ்யத் திருப்பணிகளை விரிவு செய்ய ''திருமூலர் மிஷ''னையும் ''தமிழ்ப் பேராசான்'' **வித்துவான் ஸ்ரீமத் முத்துக் குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்** தொடங்கியுள்ளார்கள். ஆதீன மடாலயங்கள் எல்லாம் முத்தமிழ்க் கலாசாலைகளாகவும்,



அருளற மன்றங்கள் எல்லாம் "ஆத்திச்சூடி", "நல்வழி"க் கேந்திரங்களாகவும் விளங்கிய பொற்காலத்தை மீண்டும் தமிழகத்திலும், ஏனைய உலக நாடுகளிலும் புலரச் செய்வதற்காகவே.. ஸ்ரீமத் முத்துக் குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் மேற்கொண்டுள்ள இம்மாபெரும் தமிழ் வேள்விக்கு, உலகளாவிய பேராதரவும், புகழும், பொருளும் குவிந்திட எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

"தமிழ் மூவாயிர"த்தின் அமிழ்தத்தைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் முழுமையாக வழங்கப் போகும் இந்த மாபெரும் ஞான வேள்வியிலே அடியேனையும் ஈடுபடுத்திப் பெருமைப்படுத்தும் வகையிலே.. என்னை இந்தத் **"திருமூலர்"** நூலின் பதிப்பாசிரியராக்கிய பேராசிரியரும், பெருந்தவச் செல்வருமான ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளை அடியேன் இதயம் கனிந்து வணங்குகின்றேன்.

முழுமுதல் சித்தராகவும், அறுபத்து மூவருள் முதல்வராகவும் விளங்கும் சிவ மஹாயோகி **திருமூலர்** பெருமானின் **திருவருள்,** உலகெங்கும் நிறைவதாகுக.



வையமெல்லாம் புகழ
திருமூலர் அருளாட்சி மன்றம்
வாழி நலம் சூழ

அன்பன்

**வேம்பத்தூர் கிருஷ்ணன்**




தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

– ஔவையார்



உ சிவமயம்

# திருமந்திர வரலாறு

திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாகத் திகழ்வது **"தமிழ் மூவாயிரம்"** என்ற திருமந்திரம் ஆகும்.

## திருமுறைகளின் வரலாறு

திருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகளாகிய மூவர் தேவாரங்களும், கி.பி. 10-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், சிதம்பரத்தில் கோவிலின்கண் இருந்த ஓர் அறையில் சேமிக்கப்பட்டு இருந்தன.

கி.பி. 965-ல் உறையூர் அரண்மனை மண்மாரியால் அழிந்தபின், கி.பி. 966-ல் திருவாரூரை அரச இருக்கையாக் கொண்டு ஆட்சி செலுத்திய இராசராசன் அபயகுல சேகரன் என்ற பட்டம் பெற்ற[1] *இரண்டாம் ஆதித்தன் (கி.பி. 966 - 970) காலத்தில் கி.பி. 969-ல் **திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள்** (கி.பி. 956 - 1012) மூவர் தேவாரப் பாடல்கள் அடங்கிய சுவடிகளைக் கண்டு எடுத்து, "தூயமனு ஏழுகோடி என்பது உன்னி" ஏழு திருமுறைகளாக வகுத்தார்.

இரண்டாம் ஆதித்தனுக்குப் பின் பட்டம் எய்திய, திருவிசைப்பாப் பாடிய கண்டராதித்த சோழருடைய மகன் மதுராந்தக **உத்தமச் சோழ அரசர்** (கி.பி. 970 -

984) காலத்தில் அடியார்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, சோழ அரசனது ஆணைபெற்று, ஏழு திருமுறைகளுடன் திருவாசகம், திருக்கோவையார் என்னும் அருள் நூல்களை எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், கண்டராதித்தர்[2] (கருவூர்த்தேவர் பாடல்களைத் தவிர) முதலியோருடைய பாடல்களையும், சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டையும் சேர்த்து ஒன்பதாம் திருமுறை யாகவும், 'தமிழ் மூவாயிரம்', என்ற திருமூலருடைய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும் வகுத்தார்கள்.

மதுராந்தக உத்தமச் சோழருக்குப்பின் பட்டம் எய்திய, அருண்மொழி என்ற முதலாம் இராசராசன் (கி.பி. 984 - 1013) என்பவன் தன்னுடைய காலத்தில் திருநாரையூர் நம்பி கழல் வணங்கி, இறைமொழிந்த திருமுகப் பாசுரத்தையும், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் என்ற இரண்டாம் மகேந்திரவர்மன் (கி.பி. 650 - 655), பட்டினத்தார், நக்கீரர், முதலாம் சேரமான் பெருமாள் (கி.பி. 667 - 712) முதலியோருடைய பாடல்களையும், கருவூர்த் தேவர்பாடிய பாடல்களையும் திருமுறைகளில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள, நம்பிகளும் அப்படியே சம்மதித்து, **"பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றும் ஆதலினால் அந்த முறை நான்கினொடு முறை பதினொன்றாக்கினார்"** என்றபடி, கருவூர்த் தேவர் பாடல்களை ஒன்பதாம் திருமறையில் சேர்த்து இறைமொழிந்த திருமுகப்பாசுர முதலாக உள்ள அருட்பாடல்களைப் பதினொராந்திருமுறை யாகவும் வகுத்தார்.

இப்பதினொரு திருமுறைகளையும் முதலாம் இராசராசன் செப்பேடு செய்து திருவாரூர்த் தியாகேசர் சந்நிதியில் ஏற்றிவைத்தான்.

இந்த மாதிரிப் பதினொரு திருமுறைகளையுங் வகுத்த பின்தான் நம்பிகள் இபமுகத்தான் அருளால் திருவந்தாதி முதலிய பிரபந்தங்களைப் பாடினார். இதனை,

**"ஆக்கியபின் திருத்தொண்டத் தொகையடைவை அருளாலே, நோக்கியபின் நாயன்மார் நுடங்கடைவும் தொழிற்பேறும், பாக்கியத்தால் இபமுகத்தோன் அருள் செய்த பகுதியினால், வாக்கியல்சேர் அந்தாதி நம்பி அடை வேவகுத்தார்"** என்ற திருமுறைகண்ட புராணச் செய்யுளால் அறியலாம்.

பின்நம்பிகளும், அரசர் பெருமானும், ஏனையோரும் திருவெருக்கத்தம் புலியுரை அடைந்து, திருநீலக்கண்ட யாழ்ப்பாணர் மரபின் வழிவந்த ஒரு பெண்மணியைக் கொண்டு திருமுறைகளுக்குப் பண் அடைவு வகுத்தார்கள்.

நம்பிகள் வகுத்த பதினொரு திருமுறைகளிலும் நம்பிகளுடைய பாடல்கள் சேர்க்கப்படவில்லை, என்னெனின், பதினொரு திருமுறைகளையும் வகுத்த பின்தான், நம்பிகள் தம்முடைய பிரபந்தங்களைப் பாடியது ஆதலின் என்க.

திருநாரையுர் நம்பிகள் இரண்டாம் ஆதித்தன், மதுராந்தக உத்தமச் சோழன், அருண்மொழி என்ற முதலாம் இராசராசன் ஆகிய மூவர் காலத்திலும் வாழ்ந்தவர் ஆவர்.

முதலாம் இராசராசன் கடைசிக் காலத்தில், அதாவது கி.பி. 1012-ல், இவர் வைகாசித் திங்களில் புனர்பூச நாளில் முக்தியெய்தினார்.

முதலாம் இராசராசனுக்கு அப்புறம் அவர் மகன்[4] **முதலாம் இராசேந்திரன்** (கி.பி.1013 - 1042) பட்டத்துக்கு வந்தான். இவனுக்குத்தான் "உத்தமச் சோழன், கங்கை கொண்டான், ஈழங் கொண்டான், கடாரங் கொண்டான்" முதலிய பட்டங்கள் உண்டு. **அபயன்** என்பது சோழ அரசர்களுக்கு உரிய ஒரு பொதுப் பெயர். இவன் காலத்தில்தான் **சேக்கிழார் பெருமான்** பன்னிரண்டாம் திருமுறையாகிய **திருத்தொண்டர்புராணத்தை**ப்பாடி அரங்கேற்றியது. சேக்கிழார் காலம் (கி.பி. 992 - 1042) ஆகும்.

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடி அரங்கேற்றியபின், சோழ அரசன் முதலாம் இரா்சேந்திரன் சேக்கிழாரை வணங்கி, முன்னே வகுத்துள்ள திருமுறைகள் பதினொன்றுடன் திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாவதாக வகுக்க வேண்டும் என்றும், நம்பியாண்டார் நம்பிகள் பாடிய பாடல்களையும் திருமுறைகளில் சேர்க்க வேண்டும் என்றும், கேட்டுக் கொள்ள, சேக்கிழார் பெருமான், இதுவும் திருவருள் என உணர்ந்து, நம்பியாண்டார் நம்பிகளுடைய பாடல்களைப் பதினொராம் திருமுறையில் சேர்த்துவிட்டுத் திருத் தொண்டர் புராணத்தைப் **பன்னிரண்டாம் திருமுறையாக** வகுத்து அமைத்தார்.

முதலாம் இராசராசன் பதினொரு திருமுறைகளையும் செப்பேடு செய்து, தியாகேசர் சந்நிதியில் ஏற்றியது போலவே, முதலாம் இராசேந்திரனும் பன்னிரண்டு திருமுறைகளையும் செப்பேடு செய்து தில்லையில் கூத்தப் பெருமான் சந்நிதியில் ஏற்றிவைத்தான்.

திருமுறைகளுக்கு எல்லாம் காலத்தால் முற்பட்டது. பத்தாம் திருமுறையாகிய **"தமிழ் மூவாயிரம்"** ஆகும். அப்படி இருக்க, அதனைப் பத்தாம் திருமுறையாக அமைக்கத் திருவருள், நம்பியாண்டார் நம்பிகளை இயக்குவானேன்? என்றால், அது, கி.பி. 13-ம் நூன்றாண்டில் **மெய்கண்டசிவாசாரியரால்** செய்யப்பட்ட சிவஞான போதநூலை நோக்க வெளியாம்.

சிவஞான போதப் பன்னிரண்டு சூத்திரங்களும், பன்னிரண்டு அமைப்பைப் பொருந்தி இருக்கின்றன. பிரமாண இயலில் கூறப்பட்ட மூன்று சூத்திரங்களும் முதல் மூன்று திருமுறைகளையும், இலக்கணவியலில் கூறப்பட்ட மூன்று சூத்திரங்களும் 4-5-6 திருமுறைகளையும், சாதன இயலில் கூறப்பட்ட மூன்று சூத்திரங்களும் 7-8-9வது திருமுறைகளையும், பயன் இயலில் கூறப்பட்ட மூன்று சூத்திரங்களும் 10-11-12வது திருமுறைகளையும் பொருந்த அமைந்துள்ளமை உணரத்தக்கது.

சிவஞான போதம் பத்தாம் சூத்திரமாகிய

*"அவனே தானே யாகிய அந்நெறி*
*ஏகனாகி இறைபணி நிற்க*

*மலமாயை தன்னொடும் வல்வினை இன்றே''*

என்ற சூத்திரமானது,

*''ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய*
*ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை''*

என்று சேக்கிழார் திருமூலநாயனார் புராணத்தில் கூறியதற்கிணங்க அமைந்துள்ளது.

தமிழ் மூவாயிரத்தின் பொருள் அமைதியை நோக்கி, நம்பியாண்டார் நம்பிகள் பத்தாம் திருமுறையாக அமைத்துள்ளார் என்று போதருகின்றது.


## திருமந்திரம் என்னும் பெயர்க் காரணம்

**''மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்''** என்று தமிழ் மூவாயிரச் சிறப்புப் பாயிரச் செய்யுளாலும், ''முன்னிய அப்பொருண்மாலை'' தமிழ் மூவாயிரம் ''சாத்தி'' என்ற சேக்கிழார் பெருமான் வாக்காலும் **''தமிழ் மூவாயிரம்''** என்பதே ஆசிரியர் நூலுக்கு இட்ட பெயர் எனத் தெரிகிறது.

மூலனுடைய உடலிற் புகுந்தபின் செய்யப்பட்டது தமிழ் மூவாயிரம் ஒன்றே. மூலனுடைய உடலிற் புகுவதற்கு முன் 'உபதேசம்முப்பது', 'மந்திரமமுந்நூறு' என்ற இரண்டு தமிழ் நூல்களையும் செய்துள்ளார் ஆசிரியர். அப்படி இருக்கத் தமிழ் மூவாயிரத்துக்குத் ''திருமந்திரம்'' எனப் பெயர் வருவானேன்? என்றால்,

*''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப''*

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி, நிறைமொழி மாந்தராகிய திருமூல நாயனாரால், சிவபெருமானது திருவருட் குறிப்பென்னும் ஆணையால், மறைப் பொருள் கூற்றுக்களையுடைய செய்யுட்களால் தமிழ் மூவாயிரம் ஆக்கப்பட்டிருப்பதால் 'மந்திரம்' எனப்பட்டது.






ஐயமாகடகடல் ஆழ்ந்த உயிர்க் கெலாம்
கையில் ஆமல கம்மெனக் காட்டுவான்
மையல் தீர்திரு மந்திரஞ் செப்பிய
செய்ய பொற்றிரு மூலனைச் சிந்திப்பாம்.

- பதிபசுபாச விளக்கம்.

# திருமூலர் வரலாறு

## திருமூல நாயனாருடைய இயற்பெயர்

சேக்கிழார் பெருமான் திருமூல நாயனாருடைய புராணத்தில் "நந்திதிருவருள் பெற்றவர்" நான்மறை யோகிகளொருவர்", "அணிமாதி சித்தி பெற்றுடையார்", 'தவ முனிவர்' என்று பெயர் குறியாமல் கூறிக்கொண்டு வந்தவர், சாத்தனூர் ஆ மேய்ப்பார் குடித்தோன்றிய **மூலன்** என்னும் பெயருடைய இடையன் வினைமாள வீடி, நிலத்திடை வீழ, ஆக்களின் துயரை நீக்குவான் கருதி, மூலனுடைய உடலில் தவ முனிவர் தம்முயிரைப் பாய்த்துத் திருமூலராய் எழலும்" என்று கூறி முடித்துள்ளார். ஆதலால், திருமூலர் என்ற பெயர் மூலனுடைய உடலில் புகுந்து எழுந்த பின் ஏற்பட்டது ஆகும். ஆனால் அவருடைய இயற்பெயர் என்ன? என்று ஆராய்ச்சி செய்ததில், அவருடைய இயற்பெயர் **சுந்தரநாதர்** என்பது தெளிவாகிறது. இதனை எற்றல் அறிதுமெனின், தமிழ் மூவாயிரம் சிறப்புப் பாயிரச் செய்யுளில்,

*"தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்*
*சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே"*

என்று கூறப்பட்டிருப்பதாலும், திருமூலனுடைய உடலிற் புகுமுன், சுந்தரநாதர் தம் இயற்பெயருடன் விளங்குங் காலத்தில் செய்த தமிழ் நூலாகிய "மந்திரம் முந்நூறு" என்ற நூலின் சிறப்புப் பாயிரச் செய்யுளில்,

''மந்திரங் கொண்டு வழிபடுவோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்''

என்று கூறப்பட்டிருப்பதாலும் அறியலாம்.

ஆகவே, 'சுந்தரம்' என்பது அவர் இயற்பெயர், தாய் தந்தையர் இட்டபெயர் என்று அறிந்தோம். 'நாதன்' என்ற பட்டத்தை அவர் எப்போது பெற்றார்? என்றால், **''நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்''** என்று அவரே கூறியிருக்கிறபடியால், நந்தி திருவருள் பெற்றவர்களுக்கு எல்லாம் நாதன் என்ற பட்டம் உண்டு என்பதையும் அறிந்தோம். நாதன் என்பது ஆகு பெயர். (தத்தி தாந்த நாமம்) என்று கூறுவர் இலக்கண நூலார். ஆகவே, சுந்தரநாதர் என்பது அவருடைய இயற்பெயர் ஆகும்.

## திருமூல நாயனாருடைய நாடு

''குறுமுனிபால் உற்றதொரு கேண்மையினால் உடன் சில நாள் உறைவதற்கு, சுந்தரநாதர் வட கயிலையினின்றும், பொதியை நோக்கிப் போந்தார்'' என்கிறார் சேக்கிழார். திருமூலராக எழுந்தபின் அவர் பொதியைக்குச் செல்லவில்லை என்பது அவருடைய புராணத்தால் விளங்குகிறது. அப்படி இருக்க, குறுமுனிபாற் கேண்மை அவருக்கு எப்போது ஏற்பட்டது? என்றால், வடகயிலைக் குருகுலத்துக்குப் படிக்கப் போனதன் முன் ஏற்பட்டிருக்க வேண்டும். அஃதாவது, அவர் சிறுவயதாயிருக்கும் போது ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்கு அவர் பாண்டிய நாட்டினராகத்தான் இருக்க வேண்டும்.

'சுந்தரம்' என்ற பெயரே அவர் தமிழ் நாட்டினர் – பாண்டிய நாட்டினர் – என்பதைத் தெரிவிக்கிறது.

"நான்மறை யோகிகளொருவர்", "சைவ நெறி மெய்யுணர்ந் தோர்" என்று சேக்கிழார் கூறுகிறபடியால், அறம், பொருள், இன்பம் என்ற நான்மறைகள் பயிலும் நாடு தமிழ் நாடாகிய பாண்டிய நாடேயாகும். சைவ நெறி மெய்யுணர சைவத்திறத்தை அடைய வேண்டும். சைவத்திறத்தை அடைய,

*"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்,*
*புகன் மிருதி வழிஉழன்றும், புகலும்ஆச் சிரம*
*அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும்*
*அருங்கலைகள் பலதெரிந்தும், ஆரணங்கள் படித்தும்,*
*சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத*
*சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்*
*திறத்தடைவர் இதிற்சரியை கிரியை யோகம்*
*செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"*

என்ற சித்தியார்ப் பாட்டின் குறிப்புப்படி, உலக நூல்களை எல்லாம் ஓதி, அவைகளில் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும். அப்படித் தேர்ச்சிபெறக் குறுமுனிவர் பொதியின்கண் அமைத்த பொதியமலைத் தமிழ்ச் சங்கமே தகுதி வாய்ந்தது.

நம் சுந்தரநாதர் இளவயதில், பொதியமலைத் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து, உலக நூல்களைக் கற்று,

அவைகளில் முதல்வராகத் தேறின படியால் குறுமுனிவருடைய நட்பு அவருக்குக் கிடைத்தது. குறுமுனிவரே சுந்தரநாதரை வடகயிலைக் குருகுலத் துக்கு, அறிவு நூல்களைக்கற்க ஆசியுடன் அனுப்பி யுள்ளார் என்பது தெரிகிறது.

ஆகவே, சுந்தரநாதருடைய நாடு பாண்டி நாடு என்பதும், அவர்[5] பொதியமலைத் தமிழ்ச் சங்கத்தில் உலக நூல்களைக் கற்றுத் தேர்ந்து, குறுமுனிவருடைய நட்பைப்பெற்று, வடகயிலைக் குருகுலத்தில் சேர்ந்து, அறிவு நூல்களைப் படித்து அவைகளிலும் தேர்ந்து, நந்தியெம் பெருமான் திருவருளும் பெற்றவர் என்பதும் அறிந்தாம்.

கயிலைக் குருகுலத்தில் சுந்தரநாதரோடு படித்தவர்கள்

*''நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்*
*நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி,*
*மன்று தொழுத பதஞ்சலி, வியாக்ரமர்,*
*என்றிவ ரென்னோ டெண்மரு மாமே''*

என்ற தமிழ் மூவாயிரப் பாசுரப்படி, சுந்தரநாதருடன் குருகுலவாசம் செய்து கொண்டு படித்தவர்கள் : 1) சனகர் 2) சனந்தனர் 3) சனாதனர் 4) சனற்குமாரர் 5) சிவயோக மாமுனி 6) மன்று தொழுத பதஞ்சலி 7) வியாக்கிரமர் என்ற ஏழு பேர் ஆவர். பதஞ்சலி என்ற பெயருடைய வர்கள் மூவர். ஆதலால் அவர்களினின்றும் வேறு பிரித்து அறியும் பொருட்டு ''மன்றுதொழுத'' என்ற அடை கொடுத்துக் கூறியுள்ளமை நோக்கத்தக்கது.

வடகயிலைக் குருகுலத்தில் இவர்கள் எல்லோரும், அறிவு நூல்களை எந்த மொழியில் படித்தார்கள்? என்னும் வினாவிற்கு விடையாக,

*'குடிமன்னு சாத்தனூர்க்கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு*
*முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத் தமிழின்*
*படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி*
*அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற அங்கணனே'*

என்று, தமிழ்நாட்டு வியாசராகிய நம்பியாண்டார் நம்பிகள் கூறியுள்ளார். வியாசர், ஆரிய வேதங்களின் சிக்கை அறுத்தது போலவே, நம்பிகளும் வடமொழி தென் மொழி[6] *வேதங்களின் ஐயப்பாட்டினை நீக்கியுள்ளார் எனத் தெரிகிறது.

**சுந்தரநாதர் திருக்கூத்துக் காட்சி கண்டது**

வடகயிலைக் குருகுலம் முடிந்ததும் சுந்தரநாதர் என்பவர் பதஞ்சலி, வியாக்கிரமர் என்ற இருவருடன் கயிலை யினின்றும் புறப்பட்டுத் தில்லைக்கு வந்து, ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு கூத்தப்பெருமானின் நடனக் காட்சியைக் காண்பான் தவம் இயற்றினார். ஒரு நாள் அவர்கள் மூவரும் அக்காட்சியைக் கண்டனர். திருமூலர் ஆகிய சுந்தரநாதர் தாம் கண்டதைத் தமிழ் மூவாயிரத்தில்,

*''தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்*
*ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே'' – 74*

என்று குறிப்பிட்டுள்ளார். இன்னும் தாம் கண்ட கூத்துக்காட்சியின் அனுபவத்தை,

*"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோல்*
*களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்*
*துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ்சு உருக்கும்,*
*ஒளிக்குள் ஆனந்தத் தமுதூறும்உள்ளத்தே" – 2778*

என்று கூறியுள்ளதும் அறியலாம்.

தனிக்கூத்துக் கண்டபின் சுந்தரநாதர் திரும்பவும் கயிலை சென்று தவத்தினில் ஈடுபட்டார். [7]பதஞ்சலி வியாக்கிரமரோ என்னில் இருவரும் தில்லையிலேயே ஆசிரமங்கள் அமைத்துக் கொண்டு தங்கிவிட்டார்கள் என்பதனைப் புலியூர்ப் புராணமும், கோயிற் புராணமும் கூறா நிற்கும்.

## திருமூலருடைய காலம்

திருமந்திர ஆசிரியர் சுந்தரநாதர் என்ற திருமூல நாயனாருடைய காலம், இன்னதென ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது முக்கியம். காலத்தைப்பற்றி ஆராய்வது வீண் என்று சிலர் கருதுகிறார்கள். கால ஆராய்ச்சி, இருட்டறையில் உள்ள பொருள்களை அறியக் கைவிளக்கு உதவுவது போல. இவ்வுலகில் ஆன்றோர் சரித்திரங்களைச் செவ்வனே அறிந்து கொள்ள உதவி செய்யும். ஆதலின், திருமூலரின் கால ஆராய்ச்சி மிக முக்கியமானதுமாகும். அதனை ஒரு சிறிது ஆராய்வாம்.

சுந்தரநாதர் என்ற திருமூலர் பதஞ்சலி, வியாக்கிரமர் காலத்தவர் என முன்னமே கூறினாம். வியாக்கிரமருக்கு வசிட்டருடைய தங்கையை மணம் செய்வித்திருந்ததும்,

அவருக்கு உபமன்னியு பிறந்ததும், உபமன்னியுக்காகத் தில்லையில் நடராசர் திருப்பாற்கடலை வரவழைத்ததும், உமாபதி சிவாசாரியார் செய்த கோயிற் புராணத்தாலும், புலியூர்ப் புராணத்தாலும் அறிகிறோம். **வசிட்டரானவர் தசரதர், இராமர் முதலியோருக்குக் குலகுரு ஆவர். ஆதலின், இவர்கள் எல்லோரும் சமகாலத்தவர் ஆவர். அந்தக் காலம்தான் இராமாயண காலம். இராமாயண காலம் கி.மு. 6000 என்பது ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. ஆதலின் திருமூலர் காலமும் கி.மு. 6000 என்று கொள்ளுதல் பொருந்தும்.**

இன்னொன்று, தமிழ் மூவாயிரத்தில் தமிழ் மொழிக்கு 16 –உயிர்களும், 35 –மெய்களும் ஆக 51 –எழுத்துக்கள் என்று திருமூலர் கூறுகின்றார் : இதனை,

*''ஓதும் எழுத்தோடு உயிர்க்கலை மூவைந்து*
*ஆதி எழுத்தவை ஐம்பதோடொன்றென்பர்'' –963*

*''விந்துவி லும்சுழி நாதம் எழுந்திட*
*பந்தத் தலைவி பதினாறு கலையதாக்*
*கந்தர வாகரம் காலுடம் பாயினாள்*
*அந்தமும் இன்றியே ஐம்பத்தொன்றாயதே'' –946*

என்னும் பாடல்களால் அறியலாம்.

ஆகவே, நம் சுந்தரநாதர் தமிழ் மொழிக்கு 51 எழுத்துக்கள் உள்ள காலத்தில் இருந்து படித்தவராக வேண்டும். அஃது எப்போது? அதுதான் இடைச்சங்க ஆரம்ப காலம் ஆகும்.

இடைச்சங்கம் கி.மு. 6805 முதல் கி.மு. 3105 வரை 3700 ஆண்டுகள் பொருநை (தாம்பிரபர்ணி) ஆற்றின் முகத் துவாரத்தில் இருந்து அழிந்துபோன பாண்டிய அரச இருக்கையாகிய கபாடபுரத்தில் நடைபெற்று வந்தது.*

இடைச்சங்கம் கி.மு. 6705–ல் வெண்டேர்ச் செழியனால் ஆரம்பிக்கப்பட்டு, வட்டெழுத்துக்களால் ஆய நூல்களைக் கொண்டே கி.மு. 6000 வரையில், 805 ஆண்டுகள் நடைபெற்றது என்பது சரித்திரம்.

கி.மு. 6000–ல் ஐந்திரம் நிறைந்த 1தொல்காப்பியர் தமிழ் மொழியில் வட்டெழுத்துக் காலத்தில் இருந்த 51 எழுத்துக்களும் அதிகப்படியானவை எனக்கண்டு, 16 – உயிர் எழுத்துக்களை 12 –உயிர் எழுத்துக்களாகவும், 35 மெய்யெழுத்துக்களை, 18 – மெய் எழுத்துக்களாகவும் சுருக்கி, அவைகளுக்குத்தக, **'தொல்காப்பியம்'** என்னும் இலக்கண நூலை யாத்து, மூன்றாம் நிலந்தரு திருவிற் பாண்டியனென்ற அனந்தகுண பாண்டியன் அவைக் களத்தில் அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற் றினார். அது முதல் தமிழ்மொழிக்குச் சதுர எழுத்துக்காலம் ஆரம்பம் ஆகும். தற்காலம் நடைபெறுவதும் அதுவே யாகும்.[9]

ஆதலின், **சுந்தரநாதர் காலம்** கி.மு. 6000க்கு முந்திய **வட்டெழுத்துக் காலமே** தான் என்பது வெள்ளிடை மலை.

கி.மு. 6000–ல் தான் குருகுலம் முடிந்து, நடன தரிசனம் காணத் தில்லைக்கு இவரும், பதஞ்சலி, வியாக்கிரமரும் வந்தது. தரிசனம் கண்டபின் இவர் வடகயிலை சென்று தவம் இருந்தார் என அவர் வாக்காலேயே அறியக கிடக்கின்றது.

பின், கி.மு. 3100–ல் அஃதாவது [10]பாரதச்சண்டை முடிந்து, கலியுகம் பிறந்தபின், தொடக்கத்திலேயே சுந்தரநாதர் குறுமுனியைக் காண விரும்பிப் பொதிய மலையை நோக்கிப் புறப்பட்டார் என்று புராணசாரமும், புராணமும் கூறுகின்றன.

பொதியை நோக்கி வந்ததும், திருமந்திரம் யாத்ததும் வடகயிலையினின்றும் புறப்பட்டுப் பல சிவத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு பொதியை நோக்கி வந்து கொண்டிருக்கையில், வழியில் திருவாவடு துறையில் மாசிலாமணி ஈசரை சுந்தரநாதர் தரிசித்தபோது, அங்கேயே அவர் தங்கி ஆகமத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று திருவருள் உணர்த்த உணர்ந்தும், அவர், பொதியை நோக்கிச் செல்ல எத்தனிக்க, **இறைவன் அவரைத் தடுத்து அங்கேயே இருத்தி, ஆகம நூலாகிய திருமந்திரத்தை வெளியாக்கச் செய்தார்.** எப்படி என்றால், திருவாவடுதுறையைக் கடந்து சுந்தரநாதர், காவிரியை நோக்கிச் செல்ல, அங்கே எதிர்க்கரையில் சாத்தனூர் நிரை மேய்க்கும் இடையன் மூலன் என்பவன் வினைமாள, வீடி இறந்துபட, ஆக்கள் எல்லாம் அவனைச் சுற்றிச் சுற்றிக் கதறும்படி செய்தது திருவருள். அவ்வாக்களின் துயரினைக் கண்டதும்,

அவைகளின் துயரை நீக்குவான் கருதி, சுந்தரநாதர் தமது உடலுக்கு அரண் செய்து, காவிரிப்புறவில் ஒரு மரப்பொந்தில் வைத்துவிட்டு, மூலனுடைய உடலில் தம்முயிரைப் **பவன வழியாகப் பாய்த்தினார்.** பாய்த்தலும் மூலனாக எழவே, ஆக்கள் எல்லாம் துயர் நீங்கின. அன்று அவர் ஆக்களுடன் சாத்தனூர் சென்று தங்கி, மறுநாள் தம்முடலைத்தேட அது சிவனருளால் மறைந்து விட்டது. திருவருள் இஃது என அவர் உணர்ந்து, திருவாவடுதுறை சென்று, திருக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் இருந்த ஓர் அரசமரத்தின் கீழ்த் தங்கி, மூவாயிரம் ஆண்டு தவம் செய்து கொண்டு, ஆண்டுக்கொரு பாட்டாக மூவாயிரம் பாடல்களைப் பாடி, ''தமிழ் மூவாயிரம்'' என்ற பெயரைச் சூட்டி, தன் மாணாக்கர்கள் எழுவருக்கும் அந்நூலைப் போதித்து வந்தார். இதனை,

*''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' –81*

*''தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்*
*சுந்தரன் ஆகமச் சொன்மொழிந் தானே'' –101*

என்னும் பாசுர அடிகளால் அறியலாம்.

இவர் கி.பி. 3100–ல் தான் பொதியமலையை நோக்கி வந்தார் என்பதற்கு ஆதாரம் என்னவெனின், நம் சுந்தரநாதர் கயிலாயத்தினின்றும் புறப்பட்டுப் பசுபதி, நேபாளம், அவிமுக்தம் (காசி), கேதாரம் முதலிய சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு பூரி என்ற

ஜகநாதம் வந்து சேர்ந்தார்.[11] அது, மகாநதிக் கரையில் உள்ள ஒரு தலம். மகா நதிக்கரையில் உள்ள காட்டில் துவரைக் கோமான் கண்ணன் ஒரு வேடனால் கொல்லப்பட்டு, அவனுடைய சரீரம் அவ்வேடனால் கொளுத்தப்படவே, நடுவில் பெரு மழை பெய்து, ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து, வெந்தும் வேகாமலும் இருந்த கண்ணன் உடலானது வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போக, பூரியில் உள்ளார் அதனைக் கண்டு எடுத்துக் குறைக்காலும், குறைக்கையுமாக இருந்த அவ்வுடலை வைத்துக் கோயில் எடுத்து வணங்கி வருவதைக் கண்டார்[12]. அந்தச் செய்தியைத் தமிழ் மூவாயிரத்தில்,

*''இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே*
*உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி*
*வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்*
*கருக்கரு வாய்நின்ற கண்ணனு மாமே'' – 53*

என்று பாடியுள்ளதை நோக்க வெளியாம்.

**திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் இருந்ததுவும், பின் கயிலை சென்று முத்திபெற்றதும்**

சுந்தரநாதர் இரண்டாம் தடவை கி.மு. 3100–ல் தென்னாடு வந்து திருவாவடுதுறையில் தங்கித் திருமூலராகத் திகழ்ந்து மூவாயிரம் ஆண்டுகள் தவம் இருந்து, ஆண்டுக்கு ஒரு பாட்டாக மூவாயிரம் பாசுரங்களைப் பாடி, ''தமிழ் மூவாயிரம்'' என்று அப்பாசுரங்கள் அடங்கிய[13] நூலுக்குப் பெயர் சூட்டி, தம்முடைய மாணவர்கள் ஏழு பேருக்கும் போதித்து அவர்களைக் கொண்டு தென்தமிழ் நாட்டில் பல

மடங்களைத் தாபித்துச் சைவ சித்தாந்த நுண்பொருள் களை உலகில் பரப்பி வந்தார்.

திருமூலர் பெயரால் இன்னும் பல இடங்களில் பல மடங்கள் தாபிக்கப்பட்டதாகக் கோகழி அடிகள் செய்த **'தத்துவரத்னாகரம்'** பேசுகிறது.[14]

இவ்வாறு புகழ்பெற, உலகம் உய்ய வாழ்ந்து, கி.மு.100-ல் சென்னிமதி அணிந்தவர் தம் திருவருளால் திருக்கயிலைக்குத் திரும்பவும் சென்று, அங்கே என்றும் பிறவா நெறியாகிய திருவடி முத்தியை அடைந்தார் என்று அவர் சரித்திரம் பேசுகின்றது.

## திருமந்திரம்

இதுகாறும் திருமூலர் என்ற சுந்தரநாதரின் முன் பின் வரலாற்றை ஒருவாறு கூறிமுடித்தோம். இனித் திருமந்திரம் என்னும் நூலைப்பற்றிச் சிறிது கூறி, இவ்வரலாற்று ஆராய்ச்சியை முடிப்போம்.

தமிழ் மூவாயிரம் என்ற திருமந்திர நூல் ஒன்பது தந்திரங்களால் அமைந்தது. ஒன்பது தந்திரங்களும் ஒன்பது ஆகமங்களாகிய **காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம், வியாமளம்** என்ற நூல்களின் சாரம் ஆகும்.

சதாசிவ நாயனாரால் வெளியிடப்பட்ட ஆகமங்கள் இருபத்தெட்டு ஆனபோதிலும்,

''சிவமாம் பரத்தினிற் சக்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவ்ஆ கமம்எங்கள் நந்தி பெற்றானே'' –62

என்ற பாசுரப்படி நந்தியெம்பெருமானுக்குக் கிடைத்தவை மேற்கூறிய ஒன்பது ஆகமங்களேயாகும். ஆதலின், இந்த ஒன்பது ஆகமங்களையே நந்தியெம்பெருமான் குரு குலத்தில் போதித்து வந்தார். அக்குருகுலத்தில் படித்த திருமூலரும் அந்த ஒன்பது ஆகமங்களின் சாரத்தையே **ஒன்பது தந்திரங்களாக** வகுத்துக் கூறினார்.

திருமூலர் பாடியது மூவாயிரம் பாடல்களே ஆகும். ''தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்'' என்று அவரே கூறுவதால் அறியலாம். ஆனால், தற்காலம் பதிப்பிக்கப்பட்ட சில பிரதிகளில் 3081–பாடல்கள் உள்ளனவே என்றால், அதிகப்படியாய் உள்ளவை எல்லாம் இடையில் பிற புலவர்களால் நுழைக்கப் பட்டவையும், ஒரே பாட்டை இரண்டு மூன்று இடங்களில் திருப்பி அச்சடிக்கப்பட்டவையும் ஆகும். திருமூலர் பாடிய பாட்டுக்களில் சிலவற்றை எடுத்து விட்டு, சிலர் புதுப் பாட்டுக்களைப் பாடிச் சேர்த்துள் ளார்கள். இஃது எதனால் தெரிகிறது என்றால், உரை யாசிரியர்களாலும், பிற்பட்ட நூலாசிரியர்களாலும் எடுத்து ஆளப்பட்ட திருமந்திரப் பாடல்கள் இப்போது சில பிரதிகளில் இல்லாமலிருப்பதுவே சான்றாகும்.

பதினான்கு அறிவு நூல்கள் (சாத்திரங்கள்) என்று தற்காலம் நம்மிடம் இருக்கும் நூல்கள் ஏற்படுவதற்கு முன்னே, தமிழ்நாட்டில் அறிவு நூலாக (சாத்திரமாக)த் திகழ்ந்தது **திருமந்திரமே**யாகும். பதினான்கு அறிவு நூல்களில் முதல் இரண்டு நூல்களான **திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும்** திருமந்திரத்தின் வழித்தானவை என்று கூறினால் மிகையாகாது. என்னெனின், அவ் விரண்டு நூல்களிலும் உள்ள கருத்துக்களும், வாக்கியங்களும் திருமந்திரத்தை ஒட்டியே அமைந்து கிடக்கின்றன.

உதாரணமாக 'அத்திப்பழமும் அரைக்கீரை நல்வித்தும்' – (160) என்ற திருமந்திரப் பாட்டின் கருத்தும் வாக்கியமும், "முத்தி முதலுக்கே...." (42) என்ற திருவுந்தியார்ப் பாட்டிலும், "வாமத்தோர் தாமும்..." (327) என்ற திருமந்திரப் பாட்டின் கருத்தும் வாக்கியமும், "காயத்துண் மெய்ஞ்ஞான..." –(43) என்ற திருவுந்தியார்ப் பாட்டிலும் காணலாம். இப்படியே பல பாடல்களைக் காட்டலாம்; விரிவஞ்சி விடுத்தாம்.

ஆதலின், திருவுந்தியார் – திருக்களிற்றுப் படியார் ஆசிரியர்கள் திருமூலர் ஞானபரம்பரையில் வந்த ஆசிரியர் ஒருவரால் உபதேசம் பெற்றவர்கள் என்பது அறியக்கிடக்கின்றது. திருச்சிராப்பள்ளியில் உள்ள **மௌன மடம்,** மூலன் மரபில் வந்தவர் ஒருவரால் ஏற்பட்டதே ஆகும். தாயுமானவர் உபதேசம் பெற்றதும் அந்த மடத்திலேதான். தாயுமானவருக்குப் பின், அவர்

மாணவர் அருளையர் முதலியோரால் ஏற்படுத்தப்பட்ட **திட்டைமடமும்** மூலன் மரபைச் சேர்ந்ததுவே ஆகும்.

பதினான்கு அறிவு நூல்களில் (சித்தாந்த சாத்திரங்களில்) தலைசிறந்து விளங்கும் சிவஞானபோதக் கருத்துக்கள், திருமந்திரத்தில் உண்டா என்றால் காட்டுதும்

சிவஞான போதம் முதல் மூன்று சூத்திரங்களில் கூறிய கருத்துக்களைத் திருமந்திரத்தில்,

*''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்*
*பதியினைப் போல்பசு பாசம் அனாதி*
*பதியினைச் சென்றணு காப்பசு பாசம்*
*பதிஅணு கில்பசு பாசம் நிலாவே'' – 115*

என்ற பாட்டிலும்,

4–5–6–ஆம் சூத்திரங்களின் கருத்துக்களை,

*''தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னை யறியு மறிவை அறிந்தபின்*
*தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே'' – 2355*

என்ற திருமந்திரப் பாட்டிலும்,

7–8–9–ஆம் சூத்திரங்களின் கருத்துக்களை,

*''பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை*
*யொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கிப்பின்*
*தட்டொக்க மாறினன் தன்னையும் என்னையும்*
*வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே'' 1781*

என்ற திருமந்திரப்பாட்டிலும்,

10-11-12-ஆம் சூத்திரங்களின் கருத்துக்களை,

*"என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்*
*என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்*
*என்னை யறிந்திட் டிருந்தலுங் கைவிடா*
*தென்னையிட் டென்னை உசாவுகின்றேனே" – 2366*

என்ற திருமந்திரப் பாட்டிலும், அடக்கியுள்ளமை காண்க.

பதினான்கு அறிவு நூல்களிலும் திருமந்திரக் கருத்துக்களும், வாக்கியங்களும் ஆங்காங்கே மிளிர்வதைத் தனித்தனி யாகக் காட்டப்புகின் விரியும் என்று அஞ்சி விடுத்தாம்.

இத்தகைய அரிய பெரிய நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தமிழ் உலகிற்கு வழங்கும் திருப்பனந்தாள் ஸ்ரீ சாசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் புகழ் இறைவன் திருவருளால் நீடு நிலவுவதாக.

இங்ஙனம்,
**துடிசைகிழார் அ. சிதம்பரனார்**

10/98, வேங்கடசாமி ரோடு,
ஆர்.எஸ்.புரம், கோவை
20.3.1951

உ
திருச்சிற்றம்பலம்

# திருமந்திர ஆராய்ச்சி

*"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"*
– திருத்தொண்டத்தொகை.

*உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே"*[15] *– 86*
மந்திரமாலை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும், முருகவேளின் பன்னிரு கண்கள் போலவும், பன்னிரு திருக்கைகள் போலவும், தம்மை நாடிப் போற்றும் உயிர்களுக்கு ஆக்கந்தரவல்லன. இப்பன்னிரண்டு திருமுறைகளுள் பத்தாவதாக நிலைபெறுவது திருமூலநாயனார் திருவாய் மலர்ந்த "திருமந்திரம்" என்னும் உயரிய மந்திரநூல்.

## ஆசிரியர் வரலாறு

அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய இத்திருமூலரைப் பற்றிய முதற்குறிப்பை, நம்பி ஆரூரர் அருளிய திருத்தொண்டத்தொகையில் **"நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்"** என்னும் பகுதியிற் காண்கின்றோம். திருத்தொண்டத் தொகையிற் **"பிரான்"**[16] என்னும் அருமைச் சொல்லால் இருவரையே ஆரூரர் போற்றினார். ஒருவரை **"எம்பிரான்"**

எனப்போற்றி செய்தார். அவ்வொருவர் **"சம்பந்தர்"**. மற்றொருவரை **"நம்பிரான்"** என நயந்தேத்தினர். அவ்வொருவர் "திருமூலர்". "கோவணம் பேணுமேனும் பிரான் என்பவரால் எம்பெருமானையே" என்னும் சம்பந்தர் திருவாக்கினின்றும் 'பிரான்' என்னும் சொல்லின் சிறப்புப் பெறப்படும். இத்தகைய சிறப்புப் பெயரைச் சம்பந்தருக்கும், திருமூலருக்குமே சூட்டினர் ஆரூரர் என்றால், ஆரூரருக்குத் திருமூலர்பால் இருந்த மதிப்பு எப்பெற்றியது என்பது நன்கு தெரிகின்றது. ஆரூரர், தவராசயோகியாகிய திருமூலரை "நம் பிரான்" என வியந்து போற்றாது வேறு எவ்வாறுதான் போற்றக் கூடும்!

ஆரூரருக்குப் பின்னர் வந்த நம்பியாண்டார் நம்பியும் ஆரூரைப் பின்பற்றித் திருமூலரைப் 'பிரான்' என்றே தாமும் போற்றுகின்றனர்; தாம் அருளிய **"திருத்தொண்டர் திருவந்தாதி"** யில் தம் உச்சியில் திருவடி சூட்டிய பிரான் திருமூலர் என்று அவரைப் போற்றி செய்து, அவரது வரலாற்றையும் சுருக்கிக் கூறியுள்ளார். சாத்தனூரிற் பசுக்களை மேய்த்திருந்த வனுடைய உடலிற் புகுந்து, அவ்வுடலில் இருந்தபடியே சிவபிராளைத் "தமிழின்படி மன்னு வேதத்தின் சொற் படியே" பரவின பிரான் திருமூலர் என்று பின்வரும் பாடலில் விளக்கின்றார்:

*"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல*
*மேய்ப்போன் குரம்பைபுக்கு*
*முடிமன்னு கூனற் பிறையாளன்*
*தன்னை முழுத் தமிழின்*

*படிமன்னு வேதத்தின் சொற்படி*
*யேபர விட்டெ னுச்சி*
*அடிமன்ன வைத்த பிரான்*
*மூல னாகின்ற அங்கணனே.''*

நம்பியாண்டார் நம்பி இங்ஙனம் சுருக்கமாகக் கூறிய வரலாற்றைச் சேக்கிழார் பெருமான், தாம் அருளிய பெரிய புராணத்தில் விளக்கமாக எடுத்தோதியுள்ளார். பெரிய புராணத்தின்படி திருமூலர் வரலாறு சுருக்கமாகப் பின்வருமாறு:

கயிலைமால் வரையைக் காத்தருளும் நாயகர் நந்தி தேவரின் திருவருள் பெற்ற யோகிகளுள் ஒருவர் திருமூலர். அவர் அணிமாதி சித்தி பெற்றவர்: பொதிய மலையிலிருந்த தம் நண்பர் குறுமுனிவரொடு சில நாள் உடனுறைய விரும்பிப் புறப்பட்டுக் கேதாரம், பசுபதி, நேபாளம், காசி, பருப்பதம், காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, திருவதிகை, தில்லை முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறைக்கு வந்து சிவதரிசனஞ் செய்து புறப்பட்டுச் சாத்தனூர் என்னும் ஊருக்கு அருகில் வரும் பொழுது, அங்குப் பசுக்கள் மேய்ந்து கொண்டிருக்கும் இடத்தில் அவைகளை மேய்க்கும் இடையன் இறந்து கிடப்பதையும், அவனைச் சுற்றிப் பசுக்கள் கண்ணீர் விட்டுப் புலம்பி நிற்பதையுங் கண்டார். இந்த ஆயன் உயிர்பெற்று எழுந்தாலொழிய இப்பசுக்களின் துயரம் நீங்காதென உணர்ந்த இக்கருணையாளர், தமது உடலை ஒருபுறம் சேமித்து வைத்துத் தம் உயிரை, இறந்து கிடந்த மூலன் என்னும்

பெயரிய அந்த இடையன் உடலில் அடைவித்து மூலனாய் உயிர்பெற்றெழுந்தனர். ஆயன் எழுந்ததைக் கண்ட பசுக்கள், அவனை நாத்தழும்ப நக்கி, மோந்து, அணைத்து கனைப்பொடு நயந்து, களிப்பினால் வாலெடுத்துத் துள்ளித் துயரம் நீங்கின. மாலைப் பொழுது வந்ததும் பசுக்கள் தத்தம் இல்லங்களுள் தாமே நுழைய, மூலனாம் இவர் வெளியே நின்றார். இவர் காலந்தாழ்த்து நிற்பதைக்கண்ட இவர் மனைவி, இவருக்கு ஏதோ ஈனம் அடுத்ததுபோலும் எனக்கவன்று வந்து இவரை அழைக்க, 'எனக்கு உன்னுடன் யாதொரு தொடர்பும் இல்லை' என்று இவர் சொல்லிப் பொதுமடம் ஒன்றிற் புகுந்தார். பிற்றை நாள், நல்லார் பலர் வந்து இவரை அழைத்தும் பயனில்லாது போக 'இவருக்கு ஞான உணர்வு வந்துவிட்டது. இவர் இனி வரமாட்டார்' எனக்கூறி மூலன் மனையாளை அவர்கள் அழைத்துச் சென்றனர். அவர்கள் நீங்கியதும், திருமூலர் தமது பழைய உடலைத் தேடினர். அது காணப்படவில்லை. 'ஆகமப் பொருளைத் தமிழில் வகுக்க வேண்டி, இறைவன் உடலை மறைப்பித்தார் எனத் தமது ஞான உணர்வால் இவர்தேர்ந்து, திருவாவடுதுறையை அடைந்து அவர் ஓர் அரசமரத்தின் கீழ்ச் சிவயோகத்தில் அமர்ந்து, ஆண்டுக்கு ஒரு பாடலாகச் சைவாகமங்களில் உணர்த்தப்பட்ட ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நிலைகளை விளக்கும் மூவாயிரம் பாடல்களைத் தெள்ளுதீந் தமிழில் உலகோர் உய்யும்படி பாடி, மூவாயிரம் ஆண்டு இப்புவியில் மகிழ்ந்திருந்து கயிலையிற் சிவன்தாள் அடைந்தார். அவர் அங்ஙனம் பாடிய பாடல்களுக்குத்

'திருமந்திரமாலை', 'திருமந்திரம்' எனப் பெயர்கள் வழங்கலாயின.

## திருமூலர் காலம்

நம்பி ஆரூரரால் போற்றப்பட்டமையால், ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர் இவர் இருந்தார் என்பது தெளிவு. 'தமிழ் மூவாயிரஞ் சாத்தி மன்னிய மூவாயிரத் தாண்டு இப்புவிமேல் மகிழ்ந்திருந்து' எனச்சேக்கிழார் பெருமான் கூறுவதால், கி.மு. 2100க்கு முன்னரும் சித்தப் பரசித்தராகிய இவர் இருந்திருத்தல் வேண்டும். பல்லாண்டு இவர் உயிர் வாழ்ந்தனர் என்பது . . . .

*'தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்*
*ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே' – 74*

*'இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி' –80*

என்னும் இவர் திருவாக்காலும், 'சந்ததமும் இளமை யோடிருக்கலாம்' எனத் தாயுமானவர் கூறியிருந்தலாலும் ஐயமின்றிக் கொள்ளக் கிடக்கின்றது.

இவர் அருளிய திருமந்திரமாலை என்னும் நூல், திருவாவடுதுறைத் திருக்கோயிலுட் பலிபீடத்தருகிற் புதைந்து கிடந்ததாகவும், ஆங்குத் தரிசனத்துக்கு வந்த திருஞானசம்பந்த சுவாமிகள், பலிபீடத்தருகே வணங்கி எழுந்த பொழுது **''இங்குத் தமிழ் மணம் கமழுகின்றது; தோண்டிப் பாருங்கள்''** எனக்கூற, அங்ஙனமே தோண்டின பொழுது, இத்திருமந்திர நூல் கிடைத்த

தென்று. ஆன்றோர் கூறுவர். இவ்வரலாறு உண்மையாயின் திருமூலர் காலம் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னரும் போகும்.

## திருமூலர் வரலாறு: அகச் சான்றுகள் :

திருமந்திர நூலினின்றே திருமூலரைப் பற்றிய பல அரிய குறிப்புகள் கிடைக்கின்றன; அவைதாம் :

1. *சிவபிரானே இவரது வழிபடு கடவுள் :*
   *'நந்தி என்னால் தொழப்படும் எம் இறை' – 9*

2. நந்தியின் அருளால் 'நாதன்' என்னும் பட்டத்தைப் பெற்றார்; அதுகொண்டு இவர் பெயர் 'திருமூல நாதர்' எனவும் வழங்கும்.

   *'நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம் – 68*

   *'நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்....என்னோடெண்மருமாமே' – 67*

3. மூலன் என்னும் ஆயன் உடலிற் புகுந்ததும் நந்தியின் திருவருட் குறிப்பே :

   *'நந்தி அருளாலே மூலனை நாடி' – 68, 92*

4. நந்தி தேவரிடம் அருள் பெற்ற எண்மருள் இவர் ஒருவர்: மற்றைய எழுவர் நந்திகள் நால்வர். சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்ரமர் – 67

5. திருமூலரிடம் மந்திரோபதேசம் பெற்றவர் மாலாங்கன், கந்துரு, கஞ்சமலையன் முதலிய ஏழுபேர் :

*'மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன் –கஞ்ச மலையனோ, டிந்தஎழுவரும் என்வழியாமே'*

*– 69, 1443*

6. அரனடியை நாடோறும் சிந்தை செய்து ஆகமம் இவர் செப்பினர்;

*'..........அரனடி நாள்தோறும்*
*சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே' –73*

7. திருவாவடுதுறையில் அரசமர நிழலில் இருந்து, சிவநாமங்களை ஓதிக்கொண்டும், ஞானபூசை செய்து கொண்டும் எண்ணிலி காலம் இருந்தனர்.

*'ஆவடுதண்டுறை......சிவபோதியின்*
*நீழலில்....நாதனை*
*அர்ச்சித்து......எண்ணிலிகோடி இருந்தேன்'*

*– 78,79,80,82*

8. தமது புகழைத் தமிழிற் புலப்படுத்துமாறே இறைவர் தன்னைப் படைத்தனர்;

*'என்னைநன் றாக இறைவன் படைத்தனன்*
*தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே' – 81*

9. வான்வழியாக வந்தனர்;
*'வான்வழி யூடு வந்தேனே' – 83*

10. அவயோகஞ் சாராத சிவயோகி இவர் :

*'அவயோகஞ் சாரா தவன்பதி போக*
*நவயோக நந்தி நமக்களித் தானே' – 122*

11. இறைவனது திருவடித் தீட்சையும், சட்சு தீட்சையும் (கண்ணோக்கமும்) பெற்றவர் இவர் :

*'திருவடி வைத்தென் சிரத்தருள் நோக்கிப்*
*பெருவடி வைத்து' – 1597*

*'இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்*
*பதிவித்த பாதப் பாராபரன் நந்தி' – 1596*

*'.....எங்கள் கண்ணுதல் நந்தி*
*களிம்பறுத்தான் அருட்கண் விழிப்பித்து' – 114*

12. இராப்பகலற்ற இடத்தே களித்திருந்த பரமயோகி இவர்.

*'இருந்தேன் இராப்பக லற்ற இடத்தே' – 80*

13. தேவியின் அருட்பிரசாதம் பெற்றவர் இவர். திருவாவடுதுறை ஒப்பிலா முலையம்மையைத் தியானித் திருந்தவர் :

*'நேரிழையாவாள்...என் பிறப்பறுத் தாண்டவள்' – 78*

*'ஆவடுதண்டுறை – சீருடை யாள்பதம்*
*சேர்ந்திருந்தேனே' – 78*

14. வேதாகம சாரத்தைத் தமிழிற் செப்ப வந்தவர் இவர் :

*'வேதத்தைச் செப்ப வந்தேனே' – 77*
*'ஆகமம் செப்ப லுற்றேனே' – 73*

15. திருமூலர் பெருங் கருணையாளர் என்பது :

*'நான் பெற்ற இன்பம் பெறுக*
*இவ்வையகம்' – 85*

என்னும் அருமை வாக்கிற் புலப்படுகின்றன.

## நூல் நுதலும் பொருட்கள்

திருமந்திரம், வேதப்பொருளும் சிவகாம சாரமும் வடித்துள்ள அருமை நூல். 'வேதத்தைவிட்ட அறம் இல்லை, வேதத்தின் ஓதத் தகும் அறம் எல்லாம் உள' (51) என்று வேதத்தைச் சிறப்பித்தும், 'அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்...எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே, (58) என ஆகமத்தின் பெருமையைக் கூறியும், திருமூலர் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சிறப்புப்பாயிரமாம் பாடல் ஒன்றில் :

*'தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்*
*சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே' – 101*

என ஆகமத்தை மூவாயிரம் பாடல்களால் ஒன்பது தந்திரமாகத் திருமூலர் மொழிந்துள்ளார் எனக் கூறப் பட்டுள்ளது.

**பாயிரத்தில்** – கடவுள் வாழ்த்து, வேதாகமச் சிறப்பு, திருமூலர் வரலாறு முதலியனவும்.

**முதல் தந்திரத்தில்** – உபதேசம், யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, கொல்லாமை, கல்வி, கள்ளுண்ணாமை முதலியனவும்,

**இரண்டாம் தந்திரத்தில்** – அட்ட வீரட்டம். இலிங்க புரணாம், பஞ்ச கிருத்தியம், கர்ப்பக் கிரியை, சிவநிந்தை, குருநிந்தை முதலியனவும்,

**மூன்றாம் தந்திரத்தில்** – அட்டாங்க யோகம், அட்டமாசித்தி முதலியனவும்,

**நாலாந் தந்திரத்தில்** – திரு அம்பலச்சக்கரம், நவகுண்டம், வயிரவி மந்திரம் முதலியனவும்,

**ஐந்தாந் தந்திரத்தில்** – சரியை, கிரியை, யோகம், ஞானம், சத்திநிபாதம் முதலியனவும்,

**ஆறாந் தந்திரத்தில்** – குரு தரிசனம், திருநீறு, துறவு, தவ வேடம், ஞான வேடம் முதலியனவும்,

**ஏழாந் தந்திரத்தில்** – ஆறாதாரம், சிவபூஜை, குரு பூஜை, சமாதிக் கிரியை, பசு இலக்கணம் முதலியவும்,

**எட்டாந் தந்திரத்தில்** – அவத்தைகள், வாய்மை, அவா அறுத்தல், பத்தி, முத்தி முதலியனவும்,

**ஒன்பதாந் தந்திரத்தில்** – பஞ்சாட்சரம், சிவதரிசனம், சூனிய சம்பாஷணை, தோத்திரம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

சூனிய சம்பாஷணை என்பது, எளிதில் பொருள் விளங்காதனவாய்க் குரு மூலமாகப் பொருள் காண வேண்டியனவாயுள்ள பாடல்களைக் கொண்டது. படிக்க வேடிக்கையாயிருக்கும்; உதாரணமாகக் கீழ்க் காட்டியுள்ள பாடலைக் காண்க :

*வழுதலை விடத்திடப் பாகல் முளைத்தது*
*புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது*
*தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகள்*
*முழுதும் பழுத்தது வாழைக் கனியே – 2869*

("வழுதலை வித்து – யோகப்பயிற்சி; பாகல் – வைராக்கியம்; புழுதியைத் தோண்டினேன் – தத்துவ ஆராய்ச்சி செய்தேன்; பூசணி பூத்தது – சிவம் வெளிப்பட்டது; தோட்டக் குடிகள் – இந்திரியாதி விடயங்கள்; பழுத்தது – கிடைத்தது; வாழைக்கனி – ஆன்ம லாபம்" இது சைவப் பெரியார் **துடிசைக்கிழார்** எழுதியுள்ள உரைக்குறிப்பு).

பிற நூல்களிற் போலவே திருமந்திரத்திலும் இடைச் செருகலான சில பாடல்கள் உள்ளன, சில பாடல்கள் இருமுறை, மும்முறை வந்துள்ளன; எடுத்துக்காட்டாக – 488–3011; 490–2012–3024; எண்ணுள்ள பாடல்களைப் பார்க்கவும். இவைகள் நன்கு ஆயப்பட்டு இப்பதிப்பிலும் சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பிலும் காட்டப் பட்டுள்ளன; சைவப் பெரியார் துடிசைகிழாரது பதிப்பில் திருத்தப்பட்டுள்ளன.

## மனப்பாடஞ் செய்யத் தகுந்தன

மனப்பாடஞ் செய்யத் தகுந்த பல பாடல்களும், பாடற் பகுதிகளும் இந்நூலில் உள்ளன: அவற்றுட் சிறந்தன சில எடுத்துக்காட்டுவாம் :

### திருமந்திரப் பாடல்கள்

1. யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே – 252

2. அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே – 270

3. பத்தினி பக்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே – 532

4. எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதனைக் கண்டறி வாரில்லை
உண்ணாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்
கண்ணாடி போலக் கலந்துநின் றானே – 603

5. உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே – 725

6. அரகர என்ன அரியதொன் றில்லை
அரகர என்ன அறிகிலர் மாந்தர்
அரசகர என்ன அமரரும் ஆவர்
அரகர என்ன அறும்பிறப் பன்றே – 916

7. குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவிழு மாறே – 1680

8. மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே – 2290

9. ஆசூச மில்லை அருநிய மத்தருக் .
காசூச மில்லை அரனை அர்ச்சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி வளர்ப்போருக்
காசூச மில்லை அருமறை ஞானிக்கே – 2552

10. சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே – 2716

சிவ சிவ iii.



## 2. பாடற் பகுதிகள்

1. சிவனோடொக் குந்தெய்வம் தேடினும் இல்லை – 5
2. நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம் – 85
3. பதியினைப் போற்பசு பாசம் அனாதி – 115
4. ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கிப் – 133
5. பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு...
   நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே – 145
6. வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம் – 229
7. நல்லாரைக் காலன் நணுககில் லானே – 238
8. வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன் – 240
9. ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின் – 250
10. அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
    என்போன் மணியினை எய்தஒண் ணாதே – 272
11. பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின் – 298
12. ஈச னடியார் இதயங் கலங்கிடத்
    தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும் – 534
13. பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே – 545
14. உடம்பார் அழியில் உயிரார் அழிவர்.....
    உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே –724

15. அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத் தங்குச மாவன – 977

16. சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தத – 1459

17. சைவம் சிவனுடன் சம்பந்த மாவது – 1512

18. குருவே சிவமெனக் கூறினன் நந்தி – 1581

19. ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை –1624

20. வாயொன்று சொல்லி மனமொன்று சிந்தித்து
நீ யொன்று செய்யல் – 1683

21. மானுட ராக்கை வடிவு சிவலிங்கம் – 1726

22. அருட்கண் ணிலாதார்க் கரும்பொருள் தோன்றா – 1808

23. அருளிற் றலைநில்லார் ஐம்பாசம் நீங்கார் – 1814

24. செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை
– 2103, 2303

25. வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை – 2103

26. **ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்** – 2104

27. இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும் – 2108

28. ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன – 504, 2175

29. வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை – 2303

# பிற உண்மைகள்

1. நூலிற் பல இடங்களிற் பல பாடல்கள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன; எடுத்துக்காட்டாக நாலாந் தந்திரத்தைப் பார்க்கவும்.

2. சைவசித்தாந்த உண்மைகள் பல ஆங்காங்கு விளக்கப்பட்டுள. எவ்வண்ணம் ஏத்தினாலும் அவ்வண்ணத்தில் ஈசன் அருள் புரிவான் என்னும் அரிய உண்டை –

*'எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்*
*அப்பரி சீசன் அருள்பெற லாமே – 36*

எனத் தெளிவுற விளக்கப்பட்டுள்ளது. ஐந்தெழுத்தின் பெருமை இருவினையொப்பு, மலபரிபாகம் முதலிய உண்மைகள் எடுத்தோதப்பட்டுளது – 966, 977, 1527.

3. தல தரிசனத்தின் இன்றியமையாமையும், அங்ஙனம் வணங்கினோர் நெஞ்சத்துள் இறைவன் கோயில் கொள்வதும் –

*'நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்*
*தேடித் திரிந்து சிவபெரு மானென்று*
*பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்*
*கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே – 1445*

என்னும் பாடலில் விளக்கப்பட்டுள்ளது,

இச்செய்யுள்.

'தேடிக் கண்டு கொண்டேன்......தேவனை
என்னுளே தேடிக் கண்டு கொண்டேன்'

என்னும் அப்பர் பெருமான் தேவாரப்பாடலை நினை வூட்டுகின்றது.

**திருமந்திர நூலின் பழமையும் பெருமையும்**

திருமந்திரம் மிகப் பழைய நூலாதலின், திருமூலருக்குப் பின் வந்தோர் பலரும் இந்நூலின் சொல்லையும் பொருளையும் ஆண்டுள்ளார்கள் (ஒப்புமைப் பகுதியைப் பார்க்கவும்)

i. பெரியார் – துடிசைகிழார் 'தமிழ் மூவாயிரத் தினின்றும் திருவள்ளுவர் எடுத்தாண்ட பகுதிகள்' என்று சில பகுதிகளை எடுத்துத் தமது திருமந்திர நூற்பதிப்பிற் காட்டியுள்ளார்.

ii. சைவ சித்தாந்த மகா சமாஜப் பதிப்பில் உள்ள திருமூலர் வரலாற்றுக் குறிப்பில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் "திருவாசகத்துக்கும் திருமந்திரத்துக்கும் பலவகையான சொல், சொற்றொடர், கருத்து, ஒற்றுமைகள் காணப்படுதலால் இவ் விரண்டு நூல்கட்கும் ஒரு தொடர்பிருத்தல் வேண்டும்"–என எழுதியுள்ளார்.

iii. அப்பர் பெருமானும் திருமந்திரச் சொற்றொடர் களையும் கருத்துக்களையும் ஆண்டுள்ளார் – (ஒப்புமைப் பகுதியைப் பார்க்க்).

iv. சித்தாந்தம் மலர் 19–இதழ் 12–ல் திரு. பூ. ஆலாலசுந்தரச் செட்டியாரவர்கள் 'திருமந்திரத்திலுள்ள சில பாடல்களும், நாலடியாரிலுள்ள சில பாக்களும் சொல்லினும் பொருளினும் ஒத்துள்ளன எனக் கூறித 'திருமந்திரமும் நாலடியாரும்' என்ற ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

v. 'திருமூல நாதருக்கும் அருணகிரிநாதருக்கும் ஒத்த இயல்புகள் பலவுள. அவர் தம் நூலகத்தும் ஒற்றுமை வாய்ந்த இடங்கள் பலவுள – எனக்காட்டி யானும் ஒரு சிறு நூல் எழுதியுள்ளேன்.

vi. அவிரோத உந்தியார் உரை, கொலை மறுத்தல் உரை, சிவப்பிரகாசம் மதுரைச் சிவப்பிரகாசர் உறை, சிவப்பிரகாசம் சிந்தனை உரை, சிவதருமோத்தர உரை, நெஞ்சுவிடுதூது உரை, சிவஞான பாடியம், வைராக்கிய தீப உரை ஆகிய இவ்வுரை நூல்கள் எட்டிலும் உரையாசிரியர்கள் திருமந்திரச் செய்யுள் களைத் தாம் கூறும் கருத்துகளுக்கு மேற்கோள்களாக ஆண்டுள்ளார்கள் – (சமாஜ மூன்றாம் பதிப்பு – பக்கம் 19 – 26).

vii. தாயுமானவர் 'அறிஞர் உரை' என்னும் பகுதியில் –

"திரையற்ற நீர் போல் தெளிய எனத் தேர்ந்த
உரைபற்றி யற்றங் கொடுங்குநா ளெந்நாளோ –"
என்னுங் கண்ணியில் :–

திரையற்ற நீர் போலச் சிந்தைதெளி வார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யோனே – 2995

எனவரும் திருமந்திரச் செய்யுளையும்,

எந்நாட் கண்ணி –குரு மரபின் வணக்கம் என்னும் பகுதியில் –

''சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநா ளெந்நாளோ –''

எனத் திருமூலர் பெருமையையும் மிக அருமையாகப் பாராட்டியுள்ளார்.

viii. அருளையர் அருள் வாக்கிய அகவலில் –
''முலன் மரபின் முளைத்த மௌனிதன்
பாலன்யா னெனவும் பரிவொடும் பகர்ந்தோன் –''

எனத் தாயுமானவரைத் துதித்த இடத்துத் திருமூலரைக் குறித்துள்ளார்.

ix. திருக்குறள், நான்மறை, தேவாரம், முனிமொழி, திருக்கோவையார், திருவாசகம் இவையெல்லாம் உயரிய, ஒத்த, இணையிலாப் பொருள் ஒன்றையே குறிப்பன என்பதற்கு –

'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் – கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்'

என்னும் ஔவையார் அருளிய நல்வழிச் செய்யுளே தக்க சான்றாம்.

திருக்குறள் முப்பால் செப்பி என்னும் தேன்பிலிற்றும் தன்மையதாய் விளங்குகின்றது; திருமந்திரம் நாற்பாலும் நவின்று என்னும் தேன்பிலுற்றும் பெற்றியதாய்ப் பொலிகின்றது. இந்நூலின் அருமை, பெருமை தெரிந்தே சித்தாந்த தீபிகை, செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் இந்நூலிலுள்ள செய்யுள்கள் சில உரை எழுதப்பெற்றன; சில ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பெற்றன; அண்மையில் மாம்பாக்கம்–குருகுல ஆசிரியர் திரு. **இளவழகனார்** அவர்களைக் கொண்டு, திருமந்திரப் பாடற் பொருள் விளக்கச் சொற்பொழிவுகளும் சென்னையில் நடந்தேறின. இத்தகைய அருமை பெருமை வாய்ந்த இந்நூல் திருப்பனந்தாள் **ஸ்ரீ–ல–ஸ்ரீ சுவாமிநாத சுவாமிகள்** அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு வெளியீடாகக் காசி மடத்துத் தலைவர் **ஸ்ரீ–ல–ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களின் அன்பின் முதிர்வால் வெளிவருகின்றது.

*''பன்னிரு திருமுறையும் என்னிரு கண்மணியாம்*
*என்ன எழுந்திடுமோர் இச்சை பிறங்குதலால்*
*என்னது செல்வமெலாம் சைவம் இலங்குறவே*
*நன்னர் அளித்திடுவேன் நானெனுந் தன்மையராய்.''*

இந்நாள் விளங்குகின்ற **ஸ்ரீ–ல–ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** சைவநெறிதழைத்தோங்கவேண்டி இயற்றும் அறப்பணிகள் எண்ணிலவாய் எழுகின்றன.

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்ற திருமூலநாதரின் பெருமையை "அருணந்தி" அல்லது வேறு யாவர் அறிவர்? நந்தி அருளாலே "அருணந்தி" வாழ்க பல்லாண்டு; அவர் தாபிக்கும் அறம் பலவும் வாழி, வாழி, வாழி.

இங்ஙனம்


**வ.சு. செங்கல்வராயபிள்ளை,** M.A.

202, லிங்கசெட்டித் தெரு,
சென்னை,
22.03.1951

---

*திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் அமரர் - காசிவாசி ஸ்ரீ-ல-ஸ்ரீ அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கும், இப்போது அருள் பாலிக்கும் கயிலை மாமுனிவர் - காசிவாசி எஜமான் ஸ்ரீ-ல-ஸ்ரீ முத்துகுமாரசுவாமித் தம்பிரான் அவர் கட்கும் நன்றி.*

---





# திருமூலர், திருமந்திரம் அடிக்குறிப்பு

(வரிசை எண்களின்படி)



1.இரண்டாம் ஆதித்தனுடைய வேறு பட்டப் பெயர்களாவன: (1) கரிகாலன் III (2) இராசராசன் (3) அபய குலசேகரன் (4) பார்த்திபேந்திரன் (5) வந்தியதேவன் (6) வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பர கேசரிவர்மன் (7) திவி (8) திவ்ய ராயர் (9) ஆதித்திய கரிகாலன் என்பனவாகும்.

இவனுடைய தகப்பன் இரண்டாம் பராந்தகன் உறையூர் அரச இருக்கையைக் கொண்டவன். இரண்டாம் ஆதித்தனுக்கு அப்புறம் பட்டத்துக்கு வந்த மதுராந்தக உத்தமச் சோழனும் (கி.பி. 970-984) திருவாரூரில் இருந்து அரசாளவில்லை. அவனுக்கு அப்புறம் பட்டத்துக்கு வந்த முதலாம் இராசராசன் என்ற அருண் மொழித்தேவனும், (கி.பி. 984-1013) தஞ்சையை அரச இருக்கையாக்கித் தஞ்சையில் அரசாண்டான். ஆகையால் திருமுறை கண்ட புராணத்தில் கூறப்பட்ட திருவாரூரில் அரசாண்ட, இராசராசன் அபயகுலசேகரன் என்பவன் இரண்டாம் ஆதித்தனே ஆவான்.

கரிகாலன் என்ற பட்டம் வகித்த சோழர்கள் ஐவராவர். (1) முதலாம் கரிகாலன் (கி.மு. 120-கி.மு 90); (2) இரண்டாம் கரிகாலன் (கி.மு. 50-கி.பி. 37); (3) மூன்றாம் கரிகாலன் (கி.பி 996-970); (4) நான்காம் கரிகாலன் (கி.பி. 1062 - 1070); (5) ஐந்தாம் கரிகாலன் (கி.பி. 1070 - 1120)

2. கருவூர்த் தேவர் மதுராந்த உத்தமச்சோழர் காலத்தில் திருவிசைப்பாப் பாடவில்லை. அருண்மொழி என்ற முதலாம் இராசராசன் (கி.பி 984-1013) காலத்தில் தஞ்சைப் பெரிய கோவில் கட்டியபின்தான் தஞ்சை இராசராசேச்சுரத்தைப் பற்றித் திரு விசைப்பா பாடி அருளினார். ஆதலின், இவர் பாடல்கள் ஒன்பதாம் திருமுறையில் பின்னால் சேர்க்கப்பட்டவையே ஆகும்.

3.திருஞான சம்பந்தம் பிள்ளை என்கிற இராமசாமிப் பிள்ளை என்பர், மூவர் பாடல்களைத் தலைமுறையாக அச்சிடும்போது திருவாரூரில் இந்தச் செப்பேடுகளை ஒப்பிட்டுப்

பார்த்து அச்சிட்டதாக அவர் அடங்கன் முறையின் முகவுரையில் கூறியுள்ளார்.

4. முதலாம் இராசேந்திரனுடைய பட்டப் பெயர்களாவன: (1) கங்கை கொண்டான் (2) உத்தமச்சோழன் (3) மதுராந்தகன் (4) விக்கிரமச் சோழன் (5) முடிகொண்டான் (6) பண்டிதச் சோழன் (7) இராசேந்திர சிங்கன் (8) அநபாயன் (9) குலோத்துங்கன் (10) ஈழங்கொண்டான் (11) கடாரங்கொண்டான் முதலியன.

"உத்தமச்சோழன்" என்ற பட்டப்பெயரை உடையவன் இவன் ஒருவனே. 1-2-3 குலோத்துங்கர்களுக்கும் இப்பட்டம் கிடையாது. சேக்கிழாருக்கு "உத்தமச் சோழப் பல்லவராயன்" என்ற பட்டத்தைக் கொடுத்தவன் இவனே ஆகும். என்னெனின், அப்பட்டம் இல்லாதவன் எவனும் அமைச்சருக்கு அப்பட்டத்தைக் கொடுக்க முடியாது.

உமாபதி சிவாசாரியார் கூறுகிறபடி, இமசேது பரியந்தம் ஆட்சி செலுத்தியன் இவனேதான் என்றும், இவனைத்தவிர வேறு சோழர்கள் ஆட்சி செய்யவில்லை என்றும் சோழர் சரித்திரத்தால் அறியக்கிடக்கின்றது. சேக்கிழார் மந்திரியாக இருந்தது இவன் காலத்தில் தான் (Vide கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழாமலர் இலக்கண விளக்கம்-சோமசுந்தர தேசிகர் செய்த "சைவ சிகாமணிகள் இருவர்")

சேக்கிழார்காலம் முதலாம் குலோத்துங்கன் காலம் என்றும், இரண்டாம் குலோத்துங்கன் காலம் என்றும் கூறுபவரும் உண்டு. ஏனைய சரித்திரக் காலவரையறைக்கு ஒத்து வருவன அல்ல.

5. பொதியமலைத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிக் கம்பநாடர், "தென்தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம், சேர்கிற் பீரேல்" என்று கூறியிருப்பது இதனை வலியுறுத்தும், இராமயண காலத்தில் பாண்டியரின் அரச இருக்கையாகிய கபாடபுரத்திலும், பொதியமலையிலும் தமிழ்ச் சங்கங்கள் நடைபெற்றதைப் பற்றி வான்மீகமும் கூறுகின்றது. (Vide தமிழ்ச் சங்கங்களின் வரலாறு பக்கம் 29-81).

6. உலகத்தினிடத்து இப்போது பல வேதங்கள் வழங்கக் காண்கின்றோம்.

பௌத்தர்களுடைய வேதங்களாகிய மூன்று பிடகங்களும் கி.மு. 6-ம் நூற்றாண்டில் விளங்கிய புத்தர் காலத்தில் எழுதப்பட்டவையே. அவை : (1) சுத்தபிடகம் (2) வினயபிடகம்

(3) அபிதன்ம பிடகம் என்பன. சைன மதத்தாருடைய எண்மறைகளும் ஏறக்குறைய கி.மு. 6-ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டனவாகும். பாரசீகர்களுடைய வேதம் 'செண்டு அவஸ்த' என்பது ஒன்றே ஆகும். விவிலியர்களுடைய 'பைபிள்' என்னும் ஒரே வேதம், கி.பி. முதல் நூற்றாண்டினதாகும். முகமதியர்களுடைய 'குரான்' என்ற ஒரே வேதமும், கி.பி. 622-ல் இருந்து ஏற்பட்டதாகும். ஆரியர்களுடைய வேதம் முதலில் 'இருக்கு' என்பது ஒன்றே ஆகும். பின் அவர்கள் இந்துஸ்தானத்தை ஏற்படுத்திய பின் 'இருக்கு-யசுர்-சாமம்'. என, அவ்வொரு வேதத்தையே மூன்றாகப் பிரித்தார்கள். "வேதம்திரையீ" என்பதும், "மும்மறையுள் நடுமுறையுள் முனிவிலெழு காண்டத்தில்", என்ற பாட்டும் இதனை வலியுறுத்தும் அதர்வண வேதம் என்பது நாலாவது என்று கூறுவார்கள். ஆனால், அது மூன்று வேதங்களிலும் அடங்கியதே ஆகும்.

நான்மறை வழக்கு, தமிழ்நாட்டில் ஆரியர்கள் வருமுன்னரே உண்டென்பதும், அவை அறம்-பொருள்-இன்பம்-வீடு என்றும் நாற்பொருளுக்கும் நான்காக அமைந்தன என்பதும், அவை தமிழ் மொழியிலேயே ஆக்கப்பட்டு வழக்கில் இருந்தன என்பதும் சரித்திரங்களாலும் இலக்கியங்களாலும் அறியக் கிடக்கின்றன.

7. பதஞ்சலிகள் மன்று தொழுத பதஞ்சலியைத் தவிர, வேறு இருவர் உண்டு.
Dr. Keith என்பவர் வடமொழியில் மகா பாஷியம் இயற்றியவர். கி.மு. 150-லும், யோகசூத்திரம் செய்த பதஞ்சலி கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்தவர்கள் என்று பல சரித்திர ஆராரங்களுடன் கூறியிருக்கிறார்.

மன்று தொழுத பதஞ்சலியோ என்றால் இராமாயண காலத்தில் சுந்தரநாதர்-வியக்கிரமருடன் வாழ்ந்தவர் ஆவர்.

8. "தமிழ் சங்கங்களின் வரலாறு" பக்கம் 70 முதல் 89 வரை பார்க்க.

தொல்காப்பியர் மூவருளர்: அவர் (1) ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் (2) புரோகித அகத்தியர் 2-ஆம் மாணவர் தொல்காப்பியர் (3) விதர்ப்பநாட்டு உலோபாமுத்திரை அகத்தியர் மாணவர் திரண தூமாக்கினி என்ற தொல்காப்பியர் என்போர் (Vide அகத்தியர் வரலாறு பக்கம், 62-63-64-65)

9. எழுத்தெனப்படுவ்து,

"அகர முதல், னகர இறுவாய் முப்பஃது என்ப சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடையே".

-தொல்காப்பியம்

10. பாரதச் சண்டை நடந்தது கி.மு. 3105, கலியுகம் பிறந்தது கி.மு. 3102,

11. சுந்தரநாதர், பூரி என்றும் ஜகநாத தலத்தைத் தரிசித்ததைப் பற்றிப் பெரிய புராணத்தில் இல்லை: என்றாலும் பசுபதி நேபாளம், கேதாரம் முதலிய வழிநெடுக உள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு சென்றவர், பூரிக்கும் சென்றார் என்பது, அங்குக் கோயில் கொண்டிருக்கும் கண்ணனைப் பற்றி அவர் தமிழ் மூவாயிரத்தில் பாடியிருப்பதே சான்று ஆகும்.

12. கண்ணனைப் பற்றிய இச் சரித்திரம் ஜகநாத புராணத்தில் காண்க. கலியுகம் பிறந்தது கி.மு. 3102-ல் என்பது கல்வெட்டு ஆதாரங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது (Vide தமிழ்ச் சங்க வரலாறு பக்கம் 76-77)

13. திரு மூலருடைய மாணவர்; மந்திரம் பெற்ற வழிமுறை 1. மாலாங்கன், 2. இந்திரன், 3. சோமன், 4. பிரமன், 5. உருத்திரன், 6. கந்துருக் காலாங்கி, 7. கஞ்சமலையனோடு இந்த எழுவரும் என்வழியாமே. (தமிழ் மூவாயிரம் - 69)

14. "கயிலையில் இமயந்தன்னில் கங்கையில் கூவம் தன்னில் பயிலுமா முண்டமான மடத்துடன் பருப்பதத்தில், இயலுகா ளத்தி தன்னில் எயின்மதிற் காஞ்சி, தில்லை, முயலு தண்டுறையே தென்றற் கிரியிடை முற்றவுண்டாம், இவையிவை மூலநாதன் இருந்திடும் இடத்தில் தானம்" என கோகழி அடிகள் செய்த தத்துவரத்னாகரம் கூறும்.

15. இதுபோல் வரும் எண்கள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடாகிய இந்தத் திருமந்திர நூலின்கண் உள்ள வரிசை எண்களைத் தழுவி நிற்பன.

16. திருப்புகலூர் 2-115-7 பிரான்-தலைவன்; தன்னை நானும் பிரான் என்றறிந்தேனே அப்பர் 5-91-8.



உ சிவமயம்



# ஒப்புமைப் பகுதி

(திரு. தணிகைமணி இராவ்பகதூர் வ.சு. செங்கல்வராய பிள்ளை, எம். எ.)

| செய்யுள் எண் | திருமந்திர நூல் மூலம் அல்லது கருத்து | நூல் | நூற்பகுதி | ஒப்புமை நூல் மூலம் அல்லது கருத்து |
|---|---|---|---|---|
| 1 | ஐந்து வென்றனன் | தே-சம்<br>தே-அப் | 1-113-10<br>5-98-7 | வென்றவன் புலனைந்தும்<br>வென்றானைப் புலனைந்தும் |
| ... | ஒன்றவன் தானே, இரண்டவன் இன்னருள், நின்றனன் மூன்றி னுள், நான்குணர்ந்தான், ஐந்து வென்றனன், ஆறுவிரிந்தனன் .. | திருப் புகழ் | 389 | தொல்லை முதல் தானென்று, மெல்லியிரு. பேதங்கள், சொல்லு குண மூவர்தம் என வாகித், துய்ய சதுர் வேதங்கள் வெய்யபுலனைந்து, தொய்யு பொருளாறங்கம் எனமேவும்.... ஆனந்த பௌவம் |
| 7 | தன்னையொப்பா யொன்றும் இல் லாத் தலைமகன் | திருக் குறள்<br>தே-சம்<br>தே-அப் | 7<br>2-62-3<br>6-1-2 | தனக்குவமை யில்லாதான்<br>தன்னோர் பிறரில்லானை<br>மற்றொருந் தன்னொப்பா ரில்லா தானை |

தே : தேவாரம் ; இதன் எண்கள் சமாஜப் பதிப்பின் எண்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | கண்ணகத்தே நின்று களி [illegible] தேனே | | [illegible] பள்ளி-9 | [illegible] நின்று களிதரு [illegible] |
| 81 | என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே | கந்-அநு | 17 | யாமோதிய கல்வியும் எம் அறிவும் தாமேபெற வேலவர் தந்ததனால் (வேலவர் தாம்பெறவே தந்ததனால்) |
| 95 | ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை | தே-சம்<br>தே-அப் | 3-112-1<br>4-112-10 | இவர் தன்மை அறிவார் ஆர்?<br>நின்னைக் காணும் படித்தன்று நின் பெருமை |
| | | ,, | 6-11-8 | ஆரொருவர் அவர் தன்மை அறிவார்? |
| 121 | உடம்பொடு செத்திட்டிருப்பர் சிவயோகி யார்களே | கந்-அலங் | 19 | நின்னை யுணர்ந்துணர்ந்து எல்லாம் ஒடுங்கிய நிர்க்குணம் பூண்டு, என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்ட திவ்வுடம்பே. |
| 123 | அளித்தான் உலகெங்கும் தானான உண்மை | திருமுருக | 293 | உலகத் தொரு நீயாகித் தோன்ற விழுமிய பெறலரும் பரிசில் நல்குமதி |
| 126 | முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய் ஒப்பிலா ஆனந்தத் துள்ளொளி புக்கு | கந்-அநு | 47 | ஆறுறையும் நீத்ததன்மேல்நிலையைப் பேசு அடியேன் பெறுமாறுளதோ |
| ,, | ஆனந்தத் துள்ளொளிபுக்கு...... சிவங் கண்டு | கந்-அலங் | 55 | ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருகன் உருவங்கண்டு |

| | | | | |
|---|---|---|---|---|
| 129 | தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்முளே | கந்- அலங் | 95 | முருகன் உருவங் கண்டு தூங்கார் |
| | | திருப் புகழ் | 757 | உணர்வொடு தூங்குவார்க்கே விளங்கும் அநுபூதி |
| 140 | தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்ததே | கந்- அலங் | 95 | சத்தியம்...சான்றுரும் அற்றதனி வெளிக்கே வந்து சந்திப்பதே. |
| 167 | காக்கை கவரிலென் கண்டார் பழிக் கிலென், பாற்றுளி பெய் யிலென் பல்லோர் பழிச்சிலென் தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங், கூத்தன் புறப் பட்டுப் போன இக்கூட்டையே | நாலடி | யாக்கை நிலை யாமை-6 | நார்த்தொடுத் தீர்க்கிலென் நன் ருய்ந் தடக்கிலென், பார்க்குழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கி லென், தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும், கூத்தன் புறப்பட்டக் கால் |
| 171 | ஈட்டிய தேன்பூ ....கூட்டி வைத்தி டும்...ஒட்டித் துரந்திட்டது வலி யார் கொள்ள...கைவிட்டவாறே | நாலடி | செல்வ நிலையாமை 10 | கொடாஅதுவைத்தீட்டினரிழப் பர்...உய்த்திட்டும் தேனிக் கரி |
| 172 | கூற்றன் வருங்கால்குதிக்கலுமாமே | ,, | ,, 6 | கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை |
| 188 | ஐவரும் அச் செய்யைக் காவல் விட்டாரே | கந்தர்- அலங் | 84 | ஐவருங் கைவிட்டு மெய்விடும் போது |
| 234 | அந் தண்மை பூண்ட...அந்தணர் | திருக்- குறள் | 30 | அந்தணர்...செந்தண்மை பூண்டொழுகலான் |
| 297 | வழித்துணையாய்மருந்தாயிருந்தார் | தே-சுந் | 7-70-9 | வானநாடனே வழித்துணை மருந்தே! |


| | | | | |
|---|---|---|---|---|
| 331 | இராப்பகல் அற்ற இடத்தே இருந்து...பராக்கற | கந்-அலங் | 74 | ஐவர் பராக்கறல்வேண்டும் என்ருல் இராப்பகலற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே |
| 409 | அப்பரி செண்பத்து நான்கு நூரு யிரம்...உயிராய் நிற்கும் | தே-சம் | 1-132-4 | உரைசேரும் எண்பத்து நான்கு நூருயிரமாம் யோனி பேதம் |
| 603 | எண்ணுயிரத்தாண்டு யோகம் இருக்கினும்கண்ணுரமுதனைக்கலன் டறிவாரில்லை உண்ணுடி உள்ளே ஒளிபெற நோக்கினல் கண்ணுடி போலக் கலந்து நின்ருனே | கந்-அலங் | 85 | காட்டிற்குறத்தி பிரான்பதத்தே கருத்தைப் புகட்டின் வீட்டிற் புகுதல் மிக எளிதே...மூச்சை யுள்ளே ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமற் சாதிக்கும் யோகிகளே |
| 632 | போதுகந்தேறும் புரி சடையான் | திருக்குறள் | 3 | மலர்மிசை ஏகினன் |
| | | தே-சம் | 1-2-5 | மலர்மிசை யெழுதரு பொருள் |
| 1178 | அனுக்குத் தாயும் மகளும் நல் தாரமுமாமே | திருவாசக | பொற்சுண் ணம்-13 | எம்பெருமான் இமவான் மகட் குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் |
| | | திருக் கோவை யார் | 112 | அவளத்தனும் மகனும்தில்லையான் |
| 1350 | சுவையொளி யூருேசை | திருக் குறள் | 27 | சுவை ஒளியூருேசை |
| 1459 | சிவனுக்குள்ளே சிவமணம்பூத்தது | திருப் புகழ் | 239 | சிவன் சிவச் சொருபம் |
| 1527 | இருவினைநேரொப்பில் இன்னருட் சத்தி குருவென வந்து | கந்-கலி வெண்பா | 21-24 | சத்திநிபாதம் தருதற் கிருவினை யும் ஒத்து வருங்காலம்...குருபர னென்றோர் திருப்பேர் கொண்டு |
| 1529 | மாலை விளக்கும் மதியமும் | தே-அப் | 5-90-1 | மாசில்வீணையும் மாலைமதியமும் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1538 | குற்றந் தெளியாதார் குணங் கொண்டு கோதாட்டார் | திருவாசக | அம்மானை 20 | குற்றங்கள் நீக்கிக் குணங் கொண்டு கோதாட்டி |
| 1593 | உரையற் றுணர்வற்றுயிர்பரமற்று ...கரையற்ற சத்தாதி | கந்-அலங் | 61 | உரையற் றுணர்வற் றுடலற் றுயிரற்று.... கரையற்....றிருக்குமக் காட்சியதே |
| 1644 | சித்தம் சிவமாக | திருவா | அச்சோ-1 | சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி |
| 1722 | என்னுடல்கோயில்கொண்டானே | திருவா | பிடித்த-10 | புன்புலால் யாக்கை...பொன் னெடுங்கோயிலாப் புகுந்து |
| 1751 | ஆரும் அறியார் அகாரம் அவ னென்று | திருக்குறள் | 1 | அகர முதலஎழுத்தெல்லாம்ஆதி பகவன் முதற்றே உலகு |
| 1753 | அகரமுதலா யனைத்துமாய்நிற்கும் | ,, | ,, | ,, |
| 1848 | ஊனினை நீக்கி யுணர்பவர் | தே-அப் | 4-25-3 | ஊனையே கழிக்க வேண்டில் உணர்மின்கள்வுள்ளத்துள்ளே |
| 1876 | உலகம் படைத்தான் | ,, | 6-3-3 | முந்தி உலகம் படைத்தான் |
| 1934 | ஒருபுற் பனிபோல் அரியதுளி விந்து...வளரும் காயத்திலே | திருப் புகழ் | 862 | அறுகுநுனி பனியனைய சிறிய துளி பெரியதொரு ஆகமாகி |
| 1953 | மாதரை மாய வருங்கூற்றம் என் றுன்ன | ,, | 734 | காலன் பெண் தனக்குள கோலாகலம் இன்றெடுத்து இளையோராவிகள் மன்பிறப்பது போல் நீள் வடிவுடை மாதர் |
| 2053 | நேயத்தே நிற்கும் | திருவா | சிவபுரா-13 | நேயத்தே நின்ற நிமலன் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2090 | பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் பெறுதற்கரிய பிரானடி பேணுர் | கந்-அலங் | 67 | பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் நின் சிற்றடியைக் குறுகிப் பணிந்து பெறக் கற்றிலேன் |
| 2262 | இருவினை ஒத்திட இன்னருட் சத்தி மருவிட | கந்-கலி வெண்பா | 21-24 | திருமந்திரம் 1527—என்பதன் நேர்பார்க்க |
| 2271 | ஆறுறுக் கப்பால் அரனினிதாமே | கந்-அநு | 47 | ,, 126-என்பதன் நேர்பார்க்க |
| 2303 | வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை | கந்-அலங் | 16 | விடுங்கோள் வெகுளியை |
| 2357 | அறிவு வடிவென் றருள் செய்தான் நந்தி | திருப்புகழ் | 1019 | அறிவும் அறியாமையும் கடந்த அறிவ திருமேனி யென்றுணர்ந்து |
| 2362 | அறிவறியாமை கடந்தறி வானுல் | ,, | ,, | ,, |
| 2580 | அறிவறியாமை இரண்டும் அகற்றி | ,, | ,, | ,, |
| 2365 | தித்திக்கும் தீங்கரும்பாய் அமுதாகி நின் றண்ணிக்கின்றுனே | திருவா | திருவேசறவு-10 | தேனும் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் |
| | ,, ,, | தே-அப் | 5-61-5 | கருப்புச் சாற்றிலும் அண்ணிக்கும் காண்மினே |
| 2388 | அண்டங்கள் ஏழுங் கடந்தகன்று | ,, | 6-97-1 | அண்டங் கடந்த சுவடு முண்டோ? |
| 2428 | எந்தையும் என்னை யறிய கிலானுகில் எந்தையை யானும் அறியகிலேனே | ,, | 5-91-8 | என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான் தன்னை நானும் முன் ஏதும் அறிந்திலேன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2436 | காமம் வெகுளி மயக்கம் இவை கடிந்து ஏமம் பிடித்திருந்தேன் | திருக் குறள் | 360 | காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றனுமங் கெடக்கெடுநோய் |
| 2550 | தேயத்துளேயென்றும் தேடித் திரிபவர் காயத்துள் நின்ற கருத் தறியாரே | தே-அப் | 4-9-12 | தேடிக்கண்டு கொண்டேன்.... என்னுளே தேடிக் கண்டு கொண்டேன் |
| 2586 | எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலால் | ,, | 6-95-3 | ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே |
| 2593 | கரியுண் விளவின் கனிபோல் | சீவக சிந்தாமணி | 1122 | வெஞ்சின வேழமுண்ட விளங் கனிபோன்று |
| | | திருப் புகழ் | 657 | வேழமுண்ட விளாங்கனியது போல |
| 2616 | அடுவன பூதங்கள் ஐந்தும் | தே-அப் | 4-76-10 | அடுவன அஞ்சு பூதம் |
| 2639 | பாலினுள் நெய்யாம் பழத்துள் இரதமும் | ,, | 6-15-1 | பாலின் நெய்யாம் பழத்தின் இரதமாம் |
| 2831 | பாலொடுதேனும் பழத்துள் இரதமும் | ,, | ,, | ,, |
| 2646 | ஆதிப்பிரான் தந்த வாளங்கை கொண்டபின்.......,என்னை விலக்க வல்லாரில்லை | கந்- அலங் | 25,64-69 | ஞானச்சுடர் வடிவாள் கண்டா யடா அந்தகா-கட்டிப் புறப் படடா சத்தி வாள் என்றன் கையதுவே |

| | | | |
|---|---|---|---|
| 2968 | நமன்வரில் ஞான வாள் கொண்டே எறிவன் | கந்-அலங் | 25,64,69 | ஞானவாளொன்று சாதித்தருள் கந்தச் சுவாமி எனைத் தேற்றிய பின்னர்க் காலன்... என்னை என் செய்யலாம் சத்திவா ளொன்றினால் சிந்தத் துணிப்பன்..... த்ரிசூலத்தையே |
| 2744 | விம்மும் வெருவும் விழும் எழும் மெய் சோரும் | தே-சம் | 2-18-1 | வெருவா விழுமால் |
| 2850 | வானின் றிடிக்கிலென் மாகடல் பொங்கிலென்......நாதனை நாடு வேன் நானே | தே-அப் | 4-112-8 | வானந்துளங்கிலென் ... தண் கடலும் மீனம்படிலென்...... ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே |
| 2970 | நினைப்பும் மறப்பு மிலாதவர் | கந்-அலங் | 55 | நினைப்பும் மறப்பும் அருர் |
| 2976 | விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின் கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே | ,, | 6 | பரமானந்தம் தித்தித் தறிந்த அன்றே கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத் ததுவே |



உ
சிவமயம்

# திருமூலர் மிஷன் - திருமூலர் அருளாட்சி மன்றம்

## தொடக்க விழா அழைப்பிதழ்

அன்புடையீர், அகங்குளிர்ந்த நல்வாழ்த்துக்கள்!

நாளிது திருமூலர் ஆண்டு 7997 ஈசுவர ஐப்பசித் திங்கள் 27-ம் நாள், 13.11.1997, வியாழன் மாலை 5.30 மணியளவில், சென்னை, தேனாம்பேட்டை காமராஜர் அரங்கில், திருமூலர் மிஷன்- திருமூலர் அருளாட்சி மன்றம் தொடக்க விழா நடைபெறும்.

உலகத் தமிழ் ஞானியாகிய திருமூலர் அருளிய திருமந்திரம், உலகிலேயே மிகத் தொன்மையான நூல்களுள் ஒன்றாகும். 'ஒன்றே குலம். ஒருவனே தேவன்', அன்பே கடவுள்' என்று முழங்கி, 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்', 'யார்க்கும் இடு மின்! அவர் - இவர் என்னன் மின்!' என்று சமதர்ம ஒருமைப்பாட்டுணர்வை பல்லா யிரம் ஆண்டுகட்கு முனனரே பரப்பினார் திருமூலர்.

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்று தமிழ் உணர்வுக்கு முதல் குரல் கொடுத்ததுடன் மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து தமிழ்மூவாயிரம் தந்த மூத்த உலகத் தமிழ் ஞானி திருமூலர் பெயரால் தொண்டு நிறுவனம் அமைத்துப் பணி செய்ய, நட்க்கவிருக்கும் தொடக்க விழாவிற்கு தாங்கள் அருள் கூர்ந்து பங்கேற்று வாழ்த்திப் பயன் கொள்ள அழைக்கின்றோம்.

இங்ஙனம்
**தலைவர் மற்றும் விழாக் குழுவினர்**

## நிகழ்ச்சி நிரல்

நாள் : 13.11.1997 வியாழக்கிழமை நேரம் : மாலை 5.30 மணி
இடம் : காமராஜர் அரங்கம், தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

இறை வணக்கம் : மங்கல இசை - திருவொற்றியூர் - கலைமாமணி
திரு பாலசுந்தரம் குழுவினர்

திருமுறை இசை - தேவாரமணி - சங்கீதபூஷணம்
சாமி தண்டபாணி. திருக்களர் கு. நாகநாதன் குழுவின

வரவேற்புரை : **வித்துவான் அருள்திரு முத்துக் குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**
(முன்னாள் ஒடுக்கம் - பெரியபூசை - திருவாவடுதுறை ஆதீனம்)
நிறுவனர் - தலைவர், திருமூலர் மிஷன் - திருமூலர் அருளாட்சி மன்றம்

தலைமை உரை : திருமூலர்மிஷன் - திருமூலர் அருளாட்சி மன்றத்தை தலைமையேற்று தொடக்கி வைத்து சிறப்புரையாற்றுபவர், மாண்புமிகு கல்வி அமைச்சர்,
பேராசிரியர். **க. அன்பழகனார்** அவர்கள்

"திருமூலர்"
நூல் வெளியிடுபவர் : மாண்புமிகு திரு.**எஸ்.மோகன்** அவர்கள்
முன்னாள் நீதியரசர் - உச்சநீதி மன்றம்

முன்னிலை : மாண்புமிகு திரு.**ஏ.ஆர்.லட்சுமணன்** அவர்கள்
நீதியரசர் - உயர்நீதி மன்றம், சென்னை.

மாண்புமிகு திரு. **இராம. வீரப்பன்** அவர்கள்
முன்னாள் அமைச்சர் - தமிழ் நாடு அரசு

படத் திறப்பாளர் : **உயர்திரு. டாக்டர் கே. வேங்கடசுப்ரமணியம்**
எம்.ஏ.,பி.எல்.,பி.எட்.,பி.எச்.டி. அவர்கள்
முன்னாள் துணை வேந்தர், மத்திய பல்கலைக் கழகம்,பாண்டிச்சேரி

நூல் பெறுபவர் : **தொழிலதிபர். டாக்டர். திரு. நல்லி குப்புசாமி செட்டியார்** அவர்கள்
உறுப்பினர், மத்தியப் பட்டுநூல் வாரியம்

குத்து விளக்கு
ஏற்றுபவர் : **திருமதி. சரோஜினி வரதப்பன்** அவர்கள்
தலைவர், இந்திய மாதர் சங்கம்

## சிறப்பு விருந்தினர்கள்

**திரு.து.முருகராஜ் இ.ஆ.ப. அவர்கள்**
தலைவர், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணைக் குழு

**திரு.பி.குமாரசாமி இ.கா.ப. அவர்கள**
கூடுதல் காவல்துறைத் தலைவர், குற்றப்பிரிவு

**டாக்டர். திரு.எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள்**
இந்தியன் வங்கி முன்னாள் தலைவர்,
தலைவர், யாதவ மகாஜன சங்கம்.

**டாக்டர். திரு.விஸ்வநாத சிவாச்சாரியார் அவர்கள்**
சமஸ்கிருத பேராசிரியர், விவேகானந்தா கல்லூரி,
முன்னாள் துணை முதல்வர்.

**டாக்டர். திரு.சிலம்பொலி செல்லப்பனார் அவர்கள்**
எம்.ஏ.பிடி., பி.எட்., பி.எச்.டி
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குனர்.

தொழிலதிபர், கவிச் சக்ரவர்த்தி, செவாலியர்
**டாக்டர். திரு.வி.ஜி.சந்தோசம் அவர்கள்**
தலைவர், வி.ஜி.பி. உலகத் தமிழ் சங்கம்

இலக்கியச் தென்றல்
**கவியரசி. திருமதி. சௌந்தரா கைலாசம் அவர்கள்**

**க்லைமாமணி திரு.கங்கை அமரன் அவர்கள்**
திரைப்பட இசையமைப்பாளர்.

**டாக்டர். திரு.த.பெரியாண்டவன் அவர்கள்**
முன்னாள் இயக்குனர், தமிழ் வளர்ச்சித் துறை.

**தொழிலதிபர் டாக்டர். திரு.இரா.களஞ்சியம் அவர்கள்**
தலைவர் அகில இந்திய தேவர் பேரவை.

**பேராசிரியர். டாக்டர் திரு.எம்.ஏ.ஹூசைன் அவர்கள்**
நிறுவனர் - இயக்குனர் இந்திய தொன்மை
சித்த மருத்துவ ஆய்வு மையம்





பேராசிரியர். டாக்டர் திரு.ப.இராமன் அவர்கள்
தலைவர், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்
மகாதேஜோ மண்டல சபை.

பேராசிரியர். திரு.மு. மேத்தா அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை

திரு.வீ.மாரியப்பன் அவர்கள்
ஆசிரியர், மக்கள் செய்தி

பேராசிரியர். டாக்டர். திரு.தி.இராசகோபாலன் அவர்கள்
கிருத்துவக் கல்லூரி, தாம்பரம்

திரு.ஜவஹர் சாந்தகுமார் எம்.ஏ.அவர்கள்
மாவட்ட வருவாய் அதிகாரி மற்றும் பொது மேலாளர் (விற்பனை)
தமிழ்நாடு அரசு சிமெண்ட் கார்பரேஷன் லிட்.

டாக்டர். திரு.எம்.விஸ்வேஸ்வரன் எம்.எஸ் அவர்கள்
செயற்குழு தலைவர்,
பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் மகாதேஜோ மண்டல சபை

டாக்டர். திரு.ஏ.வி.ஜி.ரெட்டி அவர்கள்
எம்.எஸ்சி., என்.டி., பி.எச்.டி.
நிறுவனர், இயற்கை உணவுநல மருத்துவமனை மற்றும் கல்லூரி.

சுடர் மணிக் கவிஞர். வேம்பத்தூர்கிருஷ்ணன்
சுடர்மணிப் பதிப்பகம், சென்னை - 94.

தொழிலதிபர் திரு.என். டி.மதி அவர்கள்
மாவட்ட செயலாளர்,
சோனியா காந்தி பேரவை, தென் சென்னை.

**நன்றியுரை**
"திருப்பணி - குடமுழுக்குச் செம்மல்"
ரோட்டரி திரு.க.முருகேசன் டிஅக்ரி., அவர்கள்
தலைவர். கு.தொ.வே.கூ.வங்கி.

**அனைவரும் வருகைதந்து விழாவினை
சிறப்பித்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

---

"பொய்கண்டார் காணா புனித மெய்ஞ்ஞான
மெய்கண்டார் திருவடி போற்றி!"

அலுவலக முகவரி :

திருமூலர் மிஷன் - திருமூலர் அருளாட்சி மன்றம்
39, மாவடி கோயில் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.



செங்கோல் கொண்ட பண்டித நேருஜீயும்
திருவாவடுதுறைத் தம்பிரான் சுவாமியும்

திருமூலர் நூலை

'திருமூலர்' நூலை
அனைவருக்கும்
அன்புடன் வழங்குபவர்

அருள்மாமணி
திருவாளர்
டாக்டர்
**நல்லி**
**குப்புசாமி செட்டியார்**
அவர்கள்.

